ஏனாதிநாத நாயனார்
சரித்திரம்

★

நாரண — துரைக்கண்ணன்

ஓம் :

எனாதிநாத நாயனார் சரித்திரம்

ஆசிரியர் :

நாரண—துரைக்கண்ணன்

(Author and Journalist)

1938

[விலை அணா நான்கு

உரிமையுரை

அரிவை ஒழித்தது மக்கள்தம் பேறென
அறைபவரும்
அரிதென ஆண்மகற்(கு) ஆசிசொல் வாரும்
நாணவந்து
பிரியம் செய்தே பிரிந்தவென் திருமகள்
கோகிலாம் பாட்(கு)
உரிமை ஆகும் ஏனாதி நாதர்
உயர்கதையே.

5-3-3

அணிந்துரை

பண்டைத் தமிழ் நாட்டில் சாதி மத வேற்றுமை இல்லாம லிருந்தது. இடைக்காலத்தில் அவ் வேற்றுமை கால்கொண்டது. அவ்வேற்றுமையால் அன்பு நெறிக்குப் பல இடர்கள் விளைந்தன. தமிழ் நாடு தனது இயல்பினின்றும் பிறழலாயிற்று.

சாதிமத வேற்றுமையைக் களைந்து, அன்பு நெறியை ஓம்புதற்கு, ஆண்டவ னருளால் அறுபான்மும்மை நாயன்மார்களும், பன்னிரண்டு ஆழ்வார்களும் தோன்றினார்கள். அவர்களால் சமரச சன்மார்க்கம் வலியுறுத்தப் பெற்றது.

அறுபான்மும்மை நாயன்மார் வரலாற்றுக்கு முதனூல் திருத்தொண்டத் தொகை; வழி நூல் நம்பியாண்டார் நம்பி திருவந்தாதி; சார்பு நூல் திருத்தொண்டர் புராணம். இவைகளினின்றும் வேறு மொழிகளில் பிறந்த நூல்களும் உண்டு.

நாயன்மாருள் சத்தியாக்கிரகிகள் சிலருளர். அவர்களுள் ஏனாதிநாத நாயனாரும் ஒருவர். அவர் தம் சரித்திரம் இக்காலத்துக்கு இன்றியமையாதது என்பதை விளக்க வேண்டுவதில்லை. சத்தியாக்கிரகம் ஒன்றே உலகை உய்விக்கும் என்பது ஒருதலை. சத்தியாக்கிரகிகளைப் பற்றிய நூல்கள் பல வெளிவருவதால் நாட்டுக்கு நலன் விளையும்.

ஏனாதிநாத நாயனாரைப்பற்றி உரை நடையில் சில துண்டு வெளியீடுகள் சிலரால் யாக்கப் பட்டன என்று

அறிகிறேன். அவர் தம் வரலாறு விரிந்த முறையில் இதுகாறும் எவராலும் எழுதப்படவில்லை என்று தெரிகிறது. அக் குறையைப் போக்கத் திரு. நா. துரைக் கண்ணனார் முன் வந்தமை குறித்து மகிழ்வெய்துகிறேன்.

திரு. துரைக்கண்ணனார் எழுதிய "ஏனாதிநாத நாயனார் சரித்திரம்" என்னும் நூல் பல வழியிலும் போற்றற் குரியது. நூற் கண் சரித்திரப் போக்கும், ஆராய்ச்சித் திறனும், பொருட் செறிவும், இன்ன பிறவும் ஆக்கியோரது புலமையை விளக்குகின்றன. உரை நடை உள்ளத்தைக் கவர்கிறது. படிப்போர்க்கு இன்பம் பயக்கும் முறையில் நூல் அமைந்திருக்கிறது.

இந் நூலை எழுதிய திரு. நா. துரைக்கண்ணனார்க்கு எனது வாழ்த்து உரியதாக. இத்தகைய நூல் பல அவர் வாயிலாக வெளிவரின், தமிழன்னை இன்புறுவள். தமிழ் வாழ்க.

திரு. வி. கலியாணசுந்தரன்,
"நவசக்தி" ஆசிரியர்.

II

வித்வான்-தே. போ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை
எம்.ஏ., பி.எல்.

திருவாளர் துரைக்கண்ணனார், ஏனாதிநாத நாயனாரது வரலாற்றைச் சேக்கிழாரைப் பின்பற்றி ஆராய்ந்து வெளியிட்டுள்ளார். சேக்கிழாரது பாவின் நயத்தையும் கூத்து நூலென வரலாற்றினை எழுதி யமைத்த திறத்தையும் விளக்குவதோடு ஏனாதிநாதரது சான்றோர்

குடியின் மரபுக் கமைந்த தொழில் அரசர்க்குரிய படைத்தொழிலே என முடிவு கட்டியுள்ளார் இந் நூலாசிரியர்.

தலை சிறந்த படைத்தலைவராயமைந்த அமைச்சர்கள் "ஏனாதி செறிந்த மோதிரமும்", ஏனாதி என்ற சிறப்புப் பெயரும் பெறுவது சங்க நூற்களி னின்றும் நாமறிந்த தமிழ் வழக்கு. அத்தகைப் பெருமக்களில் நம் நாயனாரும் ஒருவர் என்பதனை அவருடைய திருப் பெயரே முரசறைகிறது.

நாயனாரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி முன்னுக்கு வந்து உலகிற்கு வழிகாட்டிகளாக வாழுமாறு இந் நாளைய சான்றூர்க்கு இந் நூல் ஊக்கத்தை ஊட்டும் என்ற துணிவோடேயே இந்நூல் உலாப் போகிறது எனலாம். 'அன்பே சிவமாய் அமர்ந்திருக்'கும் சைவ உலகிலும் இந்நூலாசிரியர் வருந்துவதுபோல சாதிப் பேய் தலைவிரித்தாடுமானல், அஃது, அதனது சாக் கூத்தே என ஆசிரியர் மனமகிழ்வாராக. இந் நூல் வாழ்க. இந் நூலாசிரியர் வாழ்க.

முன்னுரை

திரு நெறித் தொண்டர் வாழ்க்கை வரலாறுகள் செய்யுள் வடிவில் சேக்கிழார் சுவாமிகளாலும் உரை நடையில் ஆறுமுக நாவலராலும் பிறராலும் வெளியிடப் பட்டுள்ளன. இத் தொண்டர்கள் அறுபத்து மூன்று நாயன்மார் எனப்படுவர். இவர்கள் சிவபெருமானுக்கும் அவனடியவர்கட்கும் சிறந்த அன்பு செலுத்திய பெருமக்கள். இவர்கள் பல குலத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களுள் ஏனாதிநாத நாயனார் சான்றார் குலத்தைச் சேர்ந்தவர். இக்குலத்தவர் தமிழ் நாட்டின் தென்பகுதியில் திருக்கோயில் நுழைவு முதலிய சமய வுரிமைகளின்றி வருந்துகின்றனர். இக்குலத்தவர் தங்களை மேம்படுத்திக் கொள்ள முயல்வது இயல்பேயாம்.

இச் சிறு நூலில் தமிழுளைஞராகிய இவ் வாசிரியர் தமது குலத் தோன்றலாகிய ஏனாதிநாத நாயனாருடைய வாழ்க்கை வரலாற்றை இயன்றவரை விரிவாக எழுதியுள்ளார். சான்றார்குலம் அரச குலம் என்ற கொள்கை இந் நூலில் விவரிக்கப் பட்டுள்ளது. இதற்குச் சில காரணங்கள் கூறப்பட்டுள்ளன. அவை புதிய காரணங்களல்ல. சேக்கிழார் காலத்திலும் நம்பியாண்டார் நம்பிகள் காலத்திலும் அவர்கள் அறிவுக் கெட்டக்கூடிய காரணங்களே யாகும். அவ் விரு சைவப் பெரியார்களும் இந்த நாயனார் க்ஷத்திரிய குலத்தவர் என்று கூறவில்லை.

குலம், சாதி என்ற வேற்றுமை நமது நாட்டில் பல நூற்றூண்டுகளாகக் குடிகொண்டுள்ளது. இதை ஒழிக்கப் பலவகையான முயற்சிகள் இந் நூற்றூண்டில் செய்யப்பட்டு வருகின்றன. சைவ சமயத்தின் அடிப்படை குலத்தால் வரும் செருக்கு உயர்வு தாழ்வாம் இவைகளை அன்பு நெறியில் நின்று அறவே மறந் தொழிப்பதாகும். இது சிவஞான சித்தியாரில், "வாழ்வெனும் மையல் விட்டு" என்ற பாடலுக்குச் சிவஞான சுவாமிகள் கூறும் உரை முதலிய பல சான்றுகளால் நன்கு விளங்கும். திருத்தொண்டர்கள் வரலாறுகளைப் பயின்று நன்னெறியில் ஒழுக முயல்வது சைவ மக்கள் கடமையாகும். இப் பயிற்சியில் சாதி குலம் என்ற நினைப்பை அறவே ஒழிப்பதுதான் உயிர் நாடியாகும்.

தாழ்ந்த குல மெனப்படும் குலத்தைச் சேர்ந்த சில நாயன்மார்கட்குத் திருக்கோயிலில் வழிபாட்டில் வேற்றுமை காட்டப்படுகின்றதென இவ் வாசிரியர் கூறுவது பெரு வியப்பாகவும், எனது அநுபவத்துக்கு முற்றிலும் முரணாகவும் உள்ளது. சைவ சமயத்துக்குப் புறம்பாகவுள்ள ஸ்மார்த்தப் பிராமணர்கள் சில விடங்களில் வேத பாராயணம் செய்தல் முதலியவற்றைச் சில நாயனர்கள் உத்ஸவங்களில் தவிர்ப்பதாகத் தெரிகிறது. இது பெரிதும் வருந்தத்தக்கது. அவ்வாறு மறுப்பவர்கட்கு ஏழு பிறவிகட்கு உய்வில்லை. ஆனல் சிவாசாரியர்களும், சைவர்களும் எல்லா நாயன்மார்களையும் வேற்றுமையின்றியே வழிபடுகின்றனர். எங்கேனும் வேற்றுமை நிகழின் உறுதியான செய்தி கிடைத்தவுடன் நானும் சைவ சித்தாந்த மகா சமாஜமும் முன்னின்று திருத்துவதற்குச் சித்தமா யிருக்கிறோம்.

இந்நூல் சான்றோர் குலத்தினரைச் சைவ சமயத்திலும், திருவருள் நெறியிலும் நிலைபெறச் செய்யுமாறு ஏனாதிநாத நாயனார் திருவருள் புரிவாராக.

இங்ஙனம்,

ம. பாலசுப்பிரமணியன்,

காரியதரிசி, சைவசித்தாந்த மகா சமாஜம்.

நூன்முகம்

“பெரியார்களது வாழ்க்கை வரலாறுகள், நாமும் நம்முடைய வாழ்க்கையை மாண்புற நடத்தலாம் என்பதை நமக்கு அறிவுறுத்துகின்றன” என்று ஆங்கில கவி லாங் பெல்லோ கூறியிருக்கிறார். இவ்வுயரிய நோக்கத்தோடேயே சமயாசாரியர்கள், ஆழ்வார்கள், நாயன்மார்கள், பகவத் பக்தர்கள், நல்லிசைப் புலவர்கள், வீரர்கள், தியாகிகள் முதலியவர்களுடைய சரித்திரங்களை நமது மூதறிஞர்கள் எழுதி வைத்துச் சென்றனர்.

ஆனால், தற்போது நம்மில் பலர், ‘உத்தமர்களுடைய சரித்திரங்களே உலக சரித்திரம்’ என்ற உண்மையை உணர்ந்திருப்பதாகக் காணப்படவில்லை. அவர்கள் நம் முன்னோர்களை—அதாவது ஞானிகளை—தியாகிகளை—வீரர்களை—ப் போற்றுவதில்லை; அவர்களுடைய வாழ்க்கை வரலாறுகளை ஆர்வத்தோடு படிப்பதுமில்லை. இந் நிலையில் சமய சாஸ்திர ஆராய்ச்சி யுடையோரில் சாதி சமய வேற்றுமைச் சேற்றில் வீழ்ந்து நெளியும் ஒரு சிலர், சாதி சமய வேற்றுமைகளை யெல்லாங் கடந்து இறையுருவாய் நின்ற பெரியோர்களையும், வீரர்களையும், தியாகிகளையும் மேற்படி வேற்றுமைகளைக் கொண்டு பிரித்து வழிபட்டு வருகின்றனர்; பாராட்டுகின்றனர். தங்கள் போன்ற மக்களிடம் சாதி சமயப் பூசல் காரணமாக உண்டான ஆத்திரத்தையும், த்வேஷத்தையும் பெரியோர்களிடமும், தியாகிகளிடமும், வீரர்களிடமுங் காண்பித்துத்

தூற்றி வருகின்றனர். இதை நினைக்கும்போது என் போன்றார் நெஞ்சங் கொதிக்கின்றது.

சாதி சமய பேதங் காரணமாகப் போற்று தொழிந்து வரும் பெரியோர்களுள் ஏனாதிநாத நாயனார் ஒருவர். அறுபத்து மூன்று நாயன்மார்களுள் திருவெண்ணீறும், சிவவேடமுமே பெரிதென்றெண்ணி வழிபட்டுய்ந்த சிவனடியாராயுள்ள அப்பெரியாரைப் பற்றிப் பெரும்பாலாருக்குத் தெரியாது;—பெரிய புராணத்தை இடையறாது ஓதும் இயற்கையுடைய சைவப் புலவர்களுக்குக் கூட அப்பெருமானைப் பற்றித் தெரியா தென்றால்—அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஏனாதிநாத நாயனார் என்று ஒருவர் இருக்கிறாரா? எனப் பெரு வியப்போடு கேட்கிறார்க ளென்றால்—அதிகங் கூறுவானேன்! இந்நிலைமைக்குக் காரணமென்ன? சைவப் பெரியார் சிலர் இதற்கு என்னென்னமோ சமாதானங் கூறிவருகின்றனர். பொறுப்புணர்ச்சி யுடையோர் யாரும் அவர்களது போலி சமாதானத்தை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

சேக்கிழார் அருளிய திருத்தொண்டர் புராணத்தைத் தவிர, ஏனாதிநாத நாயனார் சரித்திரத்தைக் கூறும் நூல் தமிழில் வேறொன்றுமில்லை. எனவே ஏனாதிநாத நாயனாரைப் பற்றி ஒரு தனி நூல் எழுத வேண்டுமென்று எனக்கும் தோன்றியது. இது சம்பந்தமாக நான் பல நாட்களாக ஆராய்ச்சி செய்து வந்தேன்.

இந்நிலையில், எனது கெழுதகை நண்பரும், கிராமணி குல மகாஜன சங்கக் காரியதரிசியுமான திரு. ம. பொ. சிவஞான கிராமணியார் என் விருப்பை

யறிந்து எனது இம்முயற்சிக்கு உற்சாகத்தையும் ஊக்கத்தையும் அளித்தார். அத்துடனில்லாது இச்சிறு நூல் வெளிவருவதற்கான சகல பொறுப்புகளையும் ஏற்றுக்கொண்டார். அவரது 'கைம்மாறு வேண்டா கடப்பாட்டை' நான் என்றும் மறக்க முடியாது.

இச்சிறு நூலுக்கு முன்னுரை, சிறப்புரை வழங்கிய பெரியார்களுக்கு நான் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன்.

பல திறப்பட்ட முயற்சிகளிடையே நின்று நான் எழுதிய இச்சிறு நூலில் சொற்குற்றம், பொருட் குற்றங்கள் காணப்படலாம். தமிழ் மக்கள் குற்றம் நீக்கிக் கோதாட்டுவார்களென நம்புகிறேன்.

சக்தி நிலையம்
மயிலாப்பூர்
30-12-36.

இங்ஙனம்,
நாரண—துரைக்கண்ணன்.

ஓம்

ஏனாதிநாத நாயனார் சரித்திரம்

கங்காளன் பூசுங் கவசத் திருநீற்றை
மங்காமற் பூசி மகிழ்வீரே யாமாகில்
தங்கா வினைகளும் சாருஞ் சிவநெறி
சிங்கார மான சிவனடி சேர்வீரே. —திருமந்திரம்.

1. ஏனாதிநாதர் தோற்றம்

தமிழ் நாட்டிலேயே சோணாடு மிக வளம்பொருந்திய நாடு. எங்கு பார்த்தாலும் பச்சை பசேலென்று செழித்து வளர்ந்த சோலைகளும், தழைத்து நெற் கதிர்களைத் தாங்கி நிற்கும் பயிர்க் கழனிகளும், இவை களின் வளப்பத்துக்குக் காரணமாய் ஓடும் காவிரி யாறும் அந் நாட்டைப் பேரழகு செய்து நின்றன.

அந் நாட்டில் எயினனூர் என்ற பெயரோடு கூடிய மூதூர் ஒன்றிருந்தது. பசுமையை அள்ளியள்ளி வழங்கிக்கொண்டிருக்கும் நெல் வயல்கள் சூழ்ந்த அவ்வூர் எண்டிசையிலும் வசிக்கும் மக்கள் மனங் களைக் கவரக்கூடியதா யிருந்தது என்றால் சிறிதும்

மிகையாகாது. வேழக்கரும்பு, மென்கரும்பு, கதிர்ச் சாலி முதலியன எங்கும் செழித்தோங்கி யிருந்தன.

அப் பொற்பதியில் பல பிரிவினரான மக்கள் எல்லா நலங்களும் வாய்க்கப்பெற்றவர்களாய் வாழ்ந்து வந்தனர். அவற்றில் சான்ருர்ப் பெருங் குடியில் ஏனுதி நாதர் என்னும் பெரியார் தோன்றினுர்.

அவர் இளமைப் பருவத்தி லிருந்தே சிவபெருமானிடம் அன்பு பூண்டொழுகி வந்தார். திருநீற்று மகிமையை உணர்ந்து அத் தொண்டில் ஈடுபட்டிருந்தார். நன்மையான செயல்களையே செய்வதில் கருத்துடையவர். அவர்பால் நற்குணங்கள் குன்ருதிருந்து வந்தன. அவர் அரச குமாரர்களுக்கு வில், வாள் முதலிய படைக்கல வித்தை கற்றுக்கொடுக்கும் ஆசிரியத் தொழிலை மேற்கொண்டிருந்தார். இதிலிருந்து இவர் அரச குடும்பத்தைச் சேர்ந்தவ ரென்பது தெரிகிறது. ஏனென்ருல், பண்டைக்காலத்தில், அரச குடும்பத்தாரும், ஆமாத்திய பிராமணர்களுமே படைக்கலம் பயில்வது ; பிறர்க்குக் கற்றுக்கொடுப்பது இயல்பாக இருந்தது. படைக்கலம் பயிற்றும் ஆசிரியத் தொழிலில் இவர் மிகவும் நிபுணத்துவ முடையவராயும், ஒப்பற்றவராயும் விளங்கினுர்.

ஆனுல், நம் ஏனுதிநாதர், அரச குமாரர்களுக்கும், வீரர்களுக்கும் படைக்கலம் பயிற்றுவிப்பதன் வாயிலாக வரும் ஊதியத்தைச் சிவனடியார்களுக்கு வேண்டுவன செய்வதில் பெரிதும் செலவழித்து வந்தார்.

2. தொழில் முறையில் பகைமை

பகைவர்களும் போற்றிப் புகழத்தக்க வகையில்,

ஏனாதிநாதர் தமது வாழ்க்கையை இனிது நடத்தி வருகையில், அவ்வூரிலேயே படைக்கலத் தொழிலைப் பயிற்றுவித்து வந்த அதிசூரன் என்பான் ஒருவன் இருந்தான். அவன் அகம்பாவமே ஒருரு வானவன். படைக்கலம் பயிற்றுந் தொழிலைக் கற்றுக்கொடுப்பதில் தனக்கு நிகராக உலகிலேயே வேறு யாரு மில்லையென எண்ணித் தருக்கி யிருந்தான். அவன் தன்னைப் பெரிதும் மதித்திருந்தானே யொழிய, அவனிடம் போர் வித்தையைக் கற்றுக்கொள்பவர்கள் மிகச் சில ராகவே யிருந்தனர். அவனது பெருமிதமாகிய தீக் குணம் அவனிடம் படைக்கலம் பயிலும் மாணவர் தொகையை நாளடைவில் குறைத்துக்கொண்டே வந்தது. எனவே, அத்தொழில் வாயிலாக வரும் ஊதியமும் நாளடைவில் மிகவுங் குறைந்துகொண்டே வரலாயிற்று.

அதிசூரனிடம் பயின்ற மாணவர்களெல்லாம் ஒவ் வொருவராக ஏனாதிநாதரிடம் போய்ச் சேரலாயினர். இதனால் அவருக்கு வருவாயும் அதிகரிக்கலாயிற்று. இதை யறிந்ததும் அதிசூரனுக்கு ஏனாதிநாதர் மீது பொறாமை ஏற்பட்டது. உள்ளத்தில் பொறாமை கொழுந்துவிட்டெரிய அவன் அப்பெரியார்பால் நீங்கா பகைமை கொண்டான். இது மனித இயற்கைதானே!

3. அதிசூரன் அறைகூவல்

சூரியன் தன் வெவ்விய கிரணங்களைக் கக்கிக் கொண்டு கிழக்கே உதயமாகும்போது, அதனொளியில் மழுங்கிக் கால்சாயும் மாலைச் சந்திரனைப்போல மன மழிந்து, அதிசூரன் ஒருநாள் தன் உறவினர்களையுந்

தோழர்களையும் ஒன்று சேர்த்துக்கொண்டு ஏனதிநாதரிடம் போருக்குச் சென்றான்.

ஏனதிநாதர் வசிக்கும் மாளிகை வாயிலின்முன் அதிசூரன் தோழர்கள் தன்னைச் சூழ நின்று, "ஓய்! ஏனதிநாதரே! வாரும் சண்டைக்கு! இப்போரில் யார் வெற்றி பெறுகிறார்களோ, அவர்கள்தான் இனி படைக்கலம் பயிற்றும் ஆசிரியத் தொழிலைப் பூண்டு வரவேண்டும். என்ன சொல்கிறீர்!" எனக் கேட்டு அறைகூவி யழைத்தான். இவன் இவ்வாறு வீரர் ஏனதிநாதரை யழைப்பது, நெருப்பு பொரி பறக்கும் கண்களையுடைய புலி வாழும் குகையண்டை குள்ளநரி சென்று சண்டைக்குக் கூப்பிடுவதுபோன் றிருந்தது.

அதிசூரனது அறைகூவல் நமது வீரர் ஏனதிநாதர் செவியில் விழுந்தது. "என்னைச் சண்டைக்குக் கூப்பிடுவது யார்?" எனக் கேட்டுக்கொண்டே அவர் வெளியே வந்தார். அதிசூரனையும் அவனது தோழர்களையுங் கண்டார். புன்சிரிப்புக் கொண்டார்.

ஆண் சிங்கத்தைப்போல் பெருமித உணர்ச்சி அவரது உள்ளத்தில் கிளர்ந்தது. போர் என்றதும் அவருடைய தோள்கள் பூரித்தன. மார்பு அகன்றது. உடனே மீண்டும் உள்ளே சென்று போருடை தரித்து அதன்மீது வார்க் கச்சையை வரிந்து கட்டினர். வீரக் கண்டைகளைக் கால்களில் அணிந்தார். இருப்புப் பட்டயத்தின் உறையில் வீரவாள் அலங்கரித்திருந்தது. கடைசியாக, கேடயத்தை இடதுகையில் பிடித்துக்கொண்டு போருக்குப் புறப்பட்டார்.

ஏனதிநாதர் அதிசூரனோடு சண்டைசெய்யப் போகிறார் என்ற செய்தியை யறிந்ததும், அவரது உறவினர்

களும், அவரிடம் படைக்கலம் பயிலும் மாணவர்களாகிய வீர வாலிபர்களும் ஓடோடியும் வந்து நமது வீரகேசரியின் இரு பக்கங்களிலும் சேர்ந்து நின்றனர்.

இருதிறத்து வீரர்களும் வரிசை வரிசையாக அணி வகுத்து நின்றனர். போர் தொடங்குமுன், அதிசூரன் முன் வந்து, "ஏனுதிநாதரே! நாம் இப்போது இங்கு சண்டை செய்வதற்கு மூலகாரணமாயிருக்கும் படைக்கலம் பயிற்றும் ஆசிரியத் தொழில் உரிமையை, யார் இப் போரில் சளைக்காது நின்று முடிவில் வெற்றி பெறுகிறார்களோ அவர்களே அடையவேண்டும். நம்மிருவரில் வெற்றி பெற்றவர்தான் இனி, அரச குமாரர்களுக்கும், மற்றவர்களுக்கும் போர்த்தொழிலைக் கற்றுக்கொடுக்கும் ஆசிரியர் பதவியை வகித்து வரவேண்டும். இந் நிபந்தனை தங்களுக்குச் சம்மதந் தானே!" என மீண்டுந் தன் குறிக்கோளைக் குறிப்பிட்டுக் கேட்டான்.

"ஆஹா! சம்மதமே" என்று ஏனுதிநாதர் கூறிய வண்ணம் தலையை யசைத்தார்.

4. கடும் போர்

அடுத்த கணமே போர் தொடங்கியது. இருதிறத்து வீரர்களும் ஒருவர்மீ தொருவர் பாய்ந்து மலைத்தனர். வாளொடு வாள்கள் மோதின. வேலொடு வேல்கள் உராய்ந்தன. விற்களி லிருந்து அம்புகள் இருபக்கங் களி லிருந்தும் சரமாரியாகப் பொழிந்தன.

இதைக் கண்டவுடனே, ஆகாய வீதியில் கழுகுகளும், பருந்துகளும், காக்கைகளும் வந்து கூடிவிட்டன. அவை தங்களுக்கு இன்று இங்கு நல்ல விருந்து

(இரை) கிடைக்குமென அறிந்து வந்து வானத்தில் வட்டமிட்டுப் பறந்துகொண் டிருந்தன.

மேகக் கூட்டங்கள் வரிசை வரிசையாக முன்னே செல்ல, மின்னல்களே இடையிடையே வீசி வானத்தில் இடியிடிப்பது போல, இருதிறத்து வீரர்களும் கேடயங்களை ஒழுங்காக முன்னிறுத்தி, வாள்களைச் சுழற்றி வீசி, வீரமொழி பகர்ந்து ஆவேசத்தோடு ஒருவரோடொருவர் எதிர்த்துப் போராடினர்.

கால்களில் கட்டியுள்ள வீரச்சதங்கைகள் சப்திக்க இலாவகமாக வாள்களைக்கொண்டு போராடிய வீரர்கள், தங்கள் கைகளி லிருந்து வாள்கள் தவறிடவும், மள்ளர்களைப்போல் கைகலந்து முஷ்டியுத்தஞ் செய்தனர். அவர்கள் ஒவ்வொருவரும் தாங்களே சிக்கிரத்தில் வெல்லவேண்டுமென்று எண்ணிக் கைகளால் குத்தியும் கால்களைத் தட்டிக் கீழே தள்ளியும் ஒருவரை யொருவர் கட்டிக்கொண்டு பூமியில் புரண்டும் வெகு மும்முரமாகச் சண்டை செய்தனர்.

ஒரு சில வீரர்கள் வேலாயுதங் கொண்டு போர் புரிந்தனர். வேறு சிலர் விற்களை நாணேற்றி அம்புகளை எதிரிகள் மீது குறிபார்த்து எய்து வீரப்போர் செய்தனர்.

இவ்விதம் இரு திறத்து வீரர்களும் பலவிதமான ஆயுதங்களைக் கொண்டு வெகு மும்முரமாகச் செய்த யுத்தத்தில், பல வீரர்களுடைய கைகள் பிடித்த வாள்களோடு துடிதுடித்து விழுந்தன. சிலர் மார்புகளில் வேல்கள் ஊடுருவிப் பாய்ந்தன. தோள்கள் துண்டித்து நிலத்தில் விழுந்தன. கேடயங்களோடு கேடயங்கள் மோதின. கால்கள் வீரக்கழல்களோடு இற்று

விழுந்தன. பூமாலைகள் சூடிய தலைகள் அற்று விழுந்து பூமியில் உருண்டன.

போர்க்களத்தில் இரத்த ஆறு பெருக்கெடுத்து ஓடியது. முண்டங்கள் பல இரத்தவெள்ளத்தில் மிதந்து அங்கு மிங்குமாய் அலைந்தன. குடல் வெளிப்பட்ட உடல்கள் அங்கங்கு மலைபோல் குவிந்தன. மேலே வட்டமிட்டுப் பறந்துகொண்டிருந்த பறந்துகளும், காகங்களும், கழுகுகளும் பாய்ந்து கீழே பறந்து வந்து பிணங்களைச் சூழ்ந்துகொண்டு பிடுங்கித் தின்னலாயின.

மிக ஆக்ரோஷமாக வாளாயுதங் கொண்டு ஒருவரை யொருவர் எதிர்த்துப் போராடிக்கொண்டிருந்த இரு வீரர்களில் ஒருவன் மற்றொருவனை இடசாரி வலசாரியாகச் சுற்றித் தந்திரமாக அவனது தொடைகளை வெட்டினான். இதனால் மாண்டு விழப்போகும் மற்றவன் தன்னை வெற்றி கொண்டவனது மார்பில் தன் வாளைப் பாய்ச்சிவிட்டு விழுந்தான். எனவே, அவனும் வேரற்று விழுந் திறந்தான். இவ்வாறு ஒருவருக் கொருவர் விட்டுக் கொடுக்காமல் சளைக்காமல் போர்த் திறமையைக் காட்டிப் பலர் சண்டைசெய்து முடிவில் வீரசுவர்க்க மடைந்தனர்.

கூரிய முனையையுடைய வேல்களைக் கொண்டு போர் செய்த வீரர்கள் கேடயங்களால் எதிரியின் தாக்குதலைத் தடுத்துக்கொண்டே சமயம் பார்த்து இலக்கு பார்த்துக் குத்தினர். இவர்களுக்கு எவ்விதத்திலும் பின் வாங்காத எதிரிகள் தங்கள் மார்பில் பாய்ந்து தங்களைக் குத்தியவர்கள் குரல் வளையைப் பார்த்து வேலால் குத்திச் சாய்த்தனர். இவ்விதம் ஏககாலத்

தில் இரு திறத்தாரும் குத்துண்டு மாண்டாலும் அவர்களது ஆண்மைகொண்ட முகங்கள் மகிழ்ச்சியால் மலர்ந்திருந்தன. அவர்கள் தரையில் விழுந்திருந்த காட்சி, தங்கள் ஆயுதங்களால் அவர்கள் நிலத்தை யளப்பதுபோல் காணப்பட்டது.

கொடைக்குணம் படைத்தவர்கள் தங்களிடத் திருந்த செல்வமெல்லாம் இழந்து வாடிய காலத்தும் தங்களை நாடி வந்தார்க்குத் தங்கள் கையிலுள்ள வற்றை இல்லை யென்னுது கொடுத் துதவுவதுபோல, வில் வீரர்கள் தாங்கள் வளைத்து நாணேற்றிய வில்லும் அம்பும் எதிரிகளுடைய கூரிய அம்புகளால் துணி பட்டு விழுந்ததைக் கண்டு அதற்காக மனந் தளர்ந்து நிற்காது, வெற்றி தரத்தக்க சுரிகை என்ற ஆயுதத் தைக் கொண்டு சண்டை செய்தனர்.

இப்போரில் இறந்த வீரர்களின் பிரேதங்களை நெருங் கிய பருந்துகள் மலர்ந்த முகங்களைக் கண்டு, அவர்கள் உயிரோடு இருக்கிருர்களென எண்ணிப் பயந்து பறந்து சென்றன. ஆனுல், அவர்களுடைய கண்கள் கொல்லன் உலையில் இருக்கும் நெருப்பைப்போல் சிவந்து காணப்பட்டன. வேலாலும் வாளாலும் கிழி யுண்டு வெளியே சரிந்திருந்த குடல்களைக் கழுகுகளும் பருந்துகளும் அலகுகளால் குத்தி மேலே தூக்கிக் கொண்டு பறந்தன. குடல்கள் போனபோதிலும் தம் வீரத்தில் சிறிதும் குறையாமல் அப்பறவைகளைப் பார்த்தவண்ணம் பலர் கிடந்தனர்.

இவ்விதமாக ஏனுதிநாத நாயனுரது வீரர்களில் பல ரும், அதிசூரனது வீரர்களில் பலரும் போரில் மடிந் தனர். எஞ்சி நின்றவர்கள் மேலும் மனச்சோர்வோ

உடல் தளர்ச்சியோ அடையாது சண்டை செய்தனர். ஆனால், சிறிது நேரத்திற்கெல்லாம் நிலைமை மாறுத லடைந்தது. ஏனாதிநாதரது வீரர்களில் சிலர் எதிரி களுடைய தாக்குதலைத் தாங்கமாட்டாது சிறிது பின் வாங்கினர். இந்நிலைமையைக் கண்ட சுத்த வீரரான ஏனாதிநாதர் கோபத்தால் கொதித்தெழுந்தார். படை யின் முன்னணிக்கு அவர் உடனே சென்றார்.

தம் காலில் கட்டிய வீர சதங்கை இனிமையாகச் சப்திக்க, கையில் பிடித்த வாள் சூரியனொளியால் பள பளவெனப் பிரகாசிக்க, ஏனாதிநாதர் ஆட்டு மந்தை யில் சிங்கம் புகுந்து சூறையாடுவது போல், அதிசூரன் படையில் பாய்ந்து கலக்கினர். அவரது வாள் வீச் சுக் காற்றுது சிரமிழந்தனர் பலர்; தோளற்றனர் பலர்; கால்கள் துண்டித மடைந்தனர் பலர்; மார்பு பிளப் புண்டனர் பலர்.

5. அதிசூரன் தோல்வி

இவ்விதம் எதிர்ப்பட்ட பகைவர்களை யெல்லாம், ஒப்பற்ற வீரராகிய ஏனாதிநாதர் தம் வாளால் வீசி யெறிந்தார். இவரது கூரிய வாள் முனைக்கு எதிர் நிற்கமாட்டாது மற்ற வீரர்கள் புறமுதகு காட்டி போர்க்களத்தை விட்டு ஓடி மறைந்தனர்.

இந்த நிலைமையை ஏனாதிநாதர் சரித்திரத்தைப் பாடிய சேக்கிழார் பெருமான்,

"தலைப்பட்டா ரெல்லாந் தனிவீரர் வாளின்
கொலைப்பட்டார் முட்டாதார் கொல்களத்தை விட்டு
நிலைப்பட்ட மெய்யுணர்வு நேர்பட்ட போதில்
அலைப்பட்ட ஆர்வமுதற் குற்றம்போல் ஆயினர்"

என்ற செய்யுளால் மிக அழகாக வருணிக்கிருர். மக்களுக்கு இயற்கையாக அமைந்துள்ள காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம் ஆகிய அறு வகைக் குற்றங்களும் மெய்யுணர்வு தோன்றிய பொழுது இருந்தவிடந் தெரியாது மறைந்துபோவது போல, ஞானக்கொழுந்தான ஏனுதிநாதர் எதிர்பட்ட போது, பாவாத்மாவான அதிசூரனது வீரர்கள் வீரங் குன்றி ஓடி யொளிந்தனர் என்று உவமிக்கும் நயம் அறிந்து மகிழத்தக்கதாகும்.

தனது வீரர்களுடைய நிலைமையைக் கண்ட அதிசூரன் அவமானத்தால் தலைகுனிந்தான். அவன் மனதில் ஆத்திரம் பொங்கி யெழுந்தது. உடனே புறமுதுகிட்டு ஓடிய தன் வீரர்களையெல்லாம் தைரியங் கூறித் திரும்ப அழைத்துக்கொண்டு, ஆண் புலிபோல் வீரத்தின் வடிவாய் நிற்கும் ஏனுதிநாதரை எதிர்த்தான்.

ஏனுதிநாதர் தம்மை எதிர்த்தவர்களையெல்லாம் தம் வாள் வீச்சினுல் சிதறடித்தார். அவரது வாள் ஒளியைக் கக்கிக்கொண்டு சுற்றிவரும் வட்டணையில், அதிசூரன் சிக்கிக்கொண்டான். அந் நெருக்கடியான நிலைமையைச் சமாளித்துத் தப்பித்துக்கொள்ள வேண்டி அவன் அவரை நெருங்கித் தாக்கினுன். அவனது தாக்குதலை ஏனுதிநாதர் மிகச் சமர்த்தாகத் தடுத்து வாளொடு வாள் மோதினுர். அவ்வேகத்தில் அதிசூரன் கையிற் பிடித்திருந்த வாள் எகிறிப் போய்த் தூரத்தில் விழுந்தது. அதிசூரன் நிராயுதபாணியானுன். அடுத்த கணம் அவன் உயிர் பிழைக்க வேண்டிப் புறமுதுகிட்டு ஓடி மறைந்தான்.

6. வஞ்சகனின் சிந்தனை

உயிரிழக்க வேண்டி வருமே எனப் பயந்து ஓடியொளித்தானே யொழிய, அதிசூரன் மனவேதனை மிகவடைந்தான். அன்று அவனுக்கு நேர்ந்த அவமானத்தை அவனால் பொறுக்க முடியவில்லை. தன்னைவிட வாள் வீரன் இவ்வுலகத்திலேயே இல்லை எனத் தருக்கியிருந்தவ னல்லவா அதிசூரன்! ஆகவே, அன்று அவன் ஊண் உறக்கத்தை இழந்தான். தரையில் படுத்தானே யொழிய கண் மூடவே யில்லை. படுக்கையில் பாம்பாய்ப் புரண்டான். "நம் ஜென்ம விரோதியாய் (பிறவிப் பகைவனாய்) இருக்கும் ஏனாதிநாதனிடம் இன்று படுதோல்வியுற நேர்ந்ததே! இன்றோடு, போர்த்தொழில் பயிற்றும் ஆசிரிய உரிமையையும் இழந்தேனே! 'நுணலும் தன் வாயால் கெடும்' என்னும் பழமொழி என் விஷயத்தில் மெய்யாயிற்று. என் வாய்ச்சொல்லால்தானே நான் கெட்டேன்! படைக்கலம் பயிற்றும் தொழிலில் கொஞ்ச நஞ்சம் வந்துகொண்டிருந்த வருவாயிலும் மண்ணன்றோ விழுந்தது! அறைகூவிச் சென்ற என் வீரம் என்னாயிற்று? ஏனாதிநாதனின் வாட் சுழலின்முன் பொடி பொடியாகவன்றோ போயிற்று. இனி என்னை இவ்வுலகில் மதிப்பார் யார்? கண்டவர்களெல்லாம் என்னை ஏளனமன்றோ செய்வார்? நங்கையர் முன்னர் நான் நாணித் தலைகுனிந் தன்றோ செல்ல வேண்டும்? சிறுவர்களும் என்னைக் கண்டு எள்ளி நகையாடுவ ரன்றோ! இனி, நான் பெருமித நடைகொண்டு நடக்கும் பெற்றிமையிழந்தேன். இனி, நான் உயிர் வாழ்ந்து பயனென்ன! நடைப்பிணத்துக்கே நான் சமானம்! ஒன்று நான்

இவ்வுலகி லிருந்து ஒழியவேண்டும் அல்லது எனது பகைவனுன ஏனாதிநாதனைத் தொலைத்துவிட்டுப் பின்னர் நான் உயிர் வாழவேண்டும். இவ்விரண்டி லொன்றே நான் செய்யத்தக்கது. நான் வீணுக உயிர் விடுவதைவிட, என் பகைவனை வஞ்சனையா லாகிலும் தொலைக்க வழி தேடுவதே நல்லது. இனி அவனை நேரில் எதிர்த்துச் சண்டைசெய்து வெற்றிபெறுவ தென்பது முடியாத காரியம். ஆகையால், வஞ்சனையைத் துணையாகக் கொண்டே நம் எதிரியைத் தொலைக்கவேண்டும்" என்று பலவாறு இரவெல்லாஞ் சிந்தித்து கடைசியாக ஒருவித முடிவுக்கு வந்தான்.

7. பயங்கர முடிவு

மறுநாள் பொழுது புலர்ந்ததும் அதிசூரன் தனது மாணவ னொருவனிடம் பின் வருஞ் செய்தியைச் சொல்லி ஏனாதிநாதரிடந் தூதனுப்பினுன். அதாவது: "ஏனாதிநாதரே! நேற்று நாம் நிகழ்த்திய போரில் இரு பக்கத்திலும் பல வீரர்கள் மாண்டனர்; மற்றும் பலர் காயமடைந்தனர். இது நம்மால் நேர்ந்த வீண் சேதமாகும். ஆகையால், நமக்காகப் பிற மக்களைப் பலியாக்குவது (இடுவது) சிறிதும் முறையன்று. ஆகவே, போர்த்தொழில் பயிற்றும் தாய உரிமையை நிர்ணயித்தற்கு—நிலைநாட்டிக்கொள்ளுதற்கு—நாமிருவரும் மட்டும் தனியாகப் போர் செய்வோம். நம் ஊர்ப்புறத்தே மக்கள் நடமாட்ட மில்லாத இன்ன இடத்தில் முற்பகலில் என்னுடன் போர் செய்ய வந்து சேர்வீராக" எனச் செய்தி சொல்லி யழைத்திருந்தான்.

இச் செய்தியைத் தூதுவன் வாயிலாகக் கேட்ட ஏனாதிநாதர், "இது சரியான யோசனையே! அவ்வாறே செய்பலாம்" என்று தம் சம்மதத்தை தெரிவித்தனுப் பினுர்.

பின்னர், அதிசூரன் தனக்குள் யோசிக்கலானுன். "திருநீறு பூசிய நெற்றியை யுடையவர்களைக் கண்டால் ஏனாதிநாதர் அடிமையாய் விடுகிருர்; அவர்கள் யாவரா யிருந்தாலும், எவ்விடத்தும், எக்காரணங்கொண்டும் தீங்கு இழைக்கமாட்டார். ஆகையால், நான் அவரை எளிதில் வெல்ல வேண்டுமானுல், நானும் திருநீறு பூசிக்கொண்டு போய்த்தான் என் கருத்தை முடிக்க வேண்டும்" எனத் தீர்மானித்தான்.

8. கள்ளத்தை மறைக்க விபூதிப் பூச்சு

அதிசூரன் இதுவரை தன் நெற்றியில் திருநீற் றையே பூசி யறியாதவன். (அவன் ஏனாதிநாதருக்கு தாய் வகையில் உறவின னென்றும், இவனது தாயும் ஏனாதிநாதரது தாயும் உடன்பிறந்த சகோதரிக ளென் றும், இவ்வா றிருந்தும், இவன் பௌத்த சமயத்தை மேற்கொண்டவ னென்றும் கூறப்படுகிறது.) அவ்வித தன்மை வாய்ந்த அவன் நெற்றி முழுதும் வெண்மை யான திருநீற்றைப் பூசினுன். ஆனுல் நெஞ்சில் குடி கொண்டிருந்த வஞ்சகம் இதனுல் ஒழியவில்லை. உள் ளிருக்கும் வஞ்சகக் கறுப்பை மறைத்தற்கே விபூதி யைப் பூசினுன். அவனது வஞ்சகச் செயலை,

"வெண்ணீறு நெற்றி விரவப் புறம்பூசி
உண்ணெஞ்சில் வஞ்சக் கறுப்பு முடன்கொண்டு"

என்று கூறி சேக்கிழார் ஏளனஞ் செய்கிருர்.

இவ்விதம் நெற்றி நிறைய வெண்ணீறு பூசிய அதிசூரன் தன் வாளாயுதத்தை யெடுத்து இடையில் கட்டிக்கொண்டு கேடயத்தால் முகத்தை மறைத்தவண்ணம் குறிப்பிட்ட இடத்துக்குத் தனியே நடந்தான்.

இவனுக்கு முன்பாகவே, ஏனாதிநாதர் அவ்விடத்துக்குத் தனியாக வந்து சிங்கம் தன் இரையை எதிர்பார்த்திருப்பதுபோல் இவன் வரவை எதிர்பார்த்திருந்தார். அதிசூரன் அவர் அருகே வந்தான். அப்போதும் அவன் கேடயத்தால் திருநீறிட்ட தன் நெற்றியை மறைத்த வண்ணமே இருந்தான். அவன் ஏனாதிநாதரை அணுகியதும், காளைமாடு கொம்புகளை வளைத்துக்கொண்டு முட்ட வருவதுபோல், அவரை நோக்கி வாளை யுருவி வீசினான். இரையகப்பட்டதும் சிங்கம் கூரிய நகங்களுடைய தன் முன்னங்கால்களைத் தூக்கிக்கொண்டு பின்வாங்கிப் பாய்வதுபோல ஏனாதிநாதரும் அதிசூரன் மீது வாள்கொண்டு பாய்ந்தார். இருவரும் சிறிது நேரம் மும்முரமாகச் சண்டை செய்தனர். ஏனாதிநாதர் இலாவகமாக அடிபெயர்த்து வாளை அதிசூரன் மீது இலக்கு வைத்து வீசினார். அக்குறி தவறாது எனத் தெரிந்த அதிசூரன் அவ்வாபத்தான நிலைமையி னின்றுந் தப்பித்துக்கொள்ள முயன்றான். அவரது வாள் வீச்சைத் தன் வாளால் தடுத்துக்கொண்டே பின்வாங்கிய அதிசூரன் இதுவரை தன் நெற்றியை மறைத்து வைத்திருந்த கேடயத்தை இப்போது எடுத்துவிட்டான்.

9. தியாக உணர்வு

தாம் நல்வழியில் நின்று அமைதியாகக் காலங்

கழித்து வருவதற்கு இடையூருக அடிக்கடி அநாவசிய மாகத் தொல்லை கொடுத்துவரும் அதிசூரன்மீது ஏனுதிநாதர் கோபங்கொள்வது இயற்கையே யல்லவா! அக்கோபத்தோடு வாட்போரில் தமக்குள்ள நிபுணத் துவத்தை வெளிப்படுத்தித் தாக்கிய ஏனுதிநாதர் அதி சூரனது நெற்றியின்மீது வெண்ணீறு இருப்பதைக் கண்டதுந் திடுக்கிட்டார். அப்படியே தயங்கி நின்று விட்டார். அவர் கையில் பிடித்திருந்த வாள் கீழே நழுவியது.

" கண்டபொழுதே கெட்டேன்! முன்புஇவர்மேற் காணுத
வெண்திரு நீற்றின்பொலிவு மேற்கண்டேன்
வேறுஇனிஎன்!
அண்டர்பிரான் சீரடியார் ஆயினர் என்றுமனங்
கொண்டுஇவர்தங் கொள்கைக் குறிவழி நிற்பேனென்று "

" கைவாளுடன் பலகை நீக்கக் கருதியது
செய்யார் நிராயுதரைக் கொன்றர் எனுந்தீமை
எய்தாமை வேண்டும் இவர்க்கென்று இரும்பலகை
நெய்வாளுடன் அடர்த்து நேர்வார்போல் நேர் நின்றர் "

நமது தோளாமொழித் தேவராய சேக்கிழார் பெரு மானை யன்றி வேறொரு புலவரால் இவ்வளவு தெளி வாக ஏனுதிநாதரது அப்போதைய மன நிலையை படம் பிடித்துக் காட்ட முடியுமோ! பகைவனின் நெற்றியில் திருநீற்றைக் கண்டதும் ஏனுதிநாதர் அடைந்த மாறு தலைக் கவனியுங்கள். "ஆ! கெட்டேன்! இதற்கு முன் இவர் திருநீறு பூசியதை நான் கண்டதே யில் லையே! இன்றல்லவோ இவர் முகத்தில் வெண் திருநீறு அழகுசெய்து நிற்பதைக் கண்டேன். இனி வேறென்ன வேண்டும்? தேவ தேவனுகிய சிவபெருமானுக்கு

இவர் சிறந்த அடியாராயினர். எனவே, இவரது உள்ளக்கருத்தின்படி நான் நடந்துகொள்ள வேண்டியதே கடமையும், தகுதியுமாகும்" எனத் தமக்குள் முடிவு செய்தவராய், வாளையும் கேடயத்தையும் கீழே எறியப் போனார்.

இதற்குள் 'நாம் ஆயுதமின்றி நின்றால், நிராயுதரைக் கொன்றார் என்னும் பழி அதிசூரனுக்கு ஏற்படும். ஆகையால் அப்பழி அவருக்கு ஏற்படாதபடி நடந்துகொள்ளவேண்டும்' என்ற எண்ணம் ஏனாதி நாதர் மனதில் எழவே, அவர் கேடயத்தை இடது கையில் பிடித்து அதிசூரன் வாள் வீச்சைத் தடுப்பது போலவும் வாளை அதிசூரன் மீது வீசுவது போலவும் வைத்துக்கொண்டு நின்றார்.

அவ்வாறு நின்ற பெரியாரது மனநிலைமையை உள்ளவாறு யாரறிவார்? அவ்வுன்னத நிலையை எம்மொழி கொண்டு வருணிக்க முடியும்? தெய்வப் புலமை வாய்ந்தவராகிய சேக்கிழார் பெருமானே,

"அந்நின்ற தொண்டர் திருவுள்ளம் ஆரறிவார்?"

என்று கூறுவாரானால், என்போன்றவர்களால் எவ்வாறு அந்நிலையை விவரிக்க முடியும்?

10. ஏனாதிநாதருக்கு வீடுபேறு

ஏனாதிநாதரது பெருந்தன்மையான குணத்தைக் கண்டும் கொடியனாகிய அதிசூரன் மனமாறுதலடையவில்லை. அவன் இதுதான் சமயமென்று கருதி நமது குலத்தை விளக்க அவதரித்த தலைவரை வாளால் வீசினான்.

கொடிய பாதகனாகிய அதிசூரனது கொலைச் செய்கையைத் தெய்வச் சேக்கிழார் விவரித்துக் கூற மனந் துணியாது,

"முன்னின்ற பாதகனுந் தன்கருத்தே முற்றுவித்தான்"

என்று காதகச் செயல் புரிந்த பாதகன் தான் கொண்ட கருத்தை முடித்தான் எனப் பூடகமாகக் கூறுகிறார்.

"ஒழுக்க முடையார்க்கு ஒல்லாவே தீய
வழுக்கியும் வாயால் சொலல்"

என்பது தமிழ்முனிவனது வேதவாக்கன்றோ! அதன் படி, சேக்கிழார் அதிசூரன் ஏனாதிநாதரைக் கொலை செய்தான் எனச் சொல்ல மனங் கூசினர்.

திருநீற்றில் பக்திகொண்ட ஏனாதிநாதரது வெண்ணீறு போன்று வெளுத்த தூய மன நிலையை முற்றுமுணர்ந்த முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் அவருக்குத் திருவருள் புரியவேண்டி, வான வீதியில் தோன்றிக் காட்சி யளித்தார். பகைவனது கை வாளால் தம் பாசத்தை அறுத்துக்கொண்டு—அதாவது உலக பந்தத்தி னின்றும் விடுபட்டு—திருவருளுக்குப் பாத்திரமான ஏனாதிநாத நாயனரை அம்மையப்பராகிய இறைவன் எக்காலத்தும் தன்னைவிட்டு நீங்காதிருக்கும்படி ஆட்கொண் டருளினர்.

"மற்றினிநாம் போற்றுவதுஎன்? வானோர் பிரான்அருளைப்
பற்றலர்தம் கைவாளாற் பாசம் அறுத்துஅருளி
உற்றவரை என்றும் உடன்பிரியா அன்புஅருளி
பொற்றொடியாள் பாகனர் பொன்னம்பலம் அணைந்தார்"

என்று சேக்கிழார் கடைசியாக ஏனாதிநாத நாயனர்

சரித்திரத்தைப் பாடி முடிக்கிறார். எனவே, நாமும்,

"தம்பெருமான் சாத்துந் திருநீற்றுச் சார்புடைய
எம்பெருமான் ஏனாதிநாதர் கழல் இறைஞ்சி"

நமது குல திலகரது சரித்திரத்தை முடிப்போமாக.

"..................................வெண்ணீறும்—
வேடமும் பூசையும் மெய்யென்றன்—பொய்யென்றன்
மாடையும் வாழ்க்கை மனையுமே.'

—நெஞ்சுவிடுதூது.

I

சரித ஆராய்ச்சியும் காலமும்

இனி, நமது ஏனதிநாத நாயனாரது சரித்திரத்தை யொட்டிய சில விஷயங்களை ஆராய்ச்சி செய்ய முற்படு வோம்.

ஏனதிநாத நாயனார் எந்த காலத்தில் இருந்தார்? அவரது தாய் தந்தையர் யார்? அவர் மனவாழ்க் கையை மேற்கொண்டு மனைவியோடு வாழ்ந்து வந் தாரா? அவருக்கு மக்க ளுண்டா? இக்கேள்வி களுக்கெல்லாம் பதில் கிடைப்பது அரிதாகவே இருக் கிறது. இவர் சரித்திரத்தைக் கூறிச்சென்ற நூல்கள் ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடிய திருத் தொண்டத் தொகை, நம்பியாண்டார் நம்பி யருளிய திருத்தொண் டர் திருவந்தாதி, சேக்கிழார் பெருமான் அருளிச் செய்த திருத்தொண்டர் புராணம் அல்லது பெரிய புராணம், கொற்றவன் குடி உமாபதி சிவாசாரியார் இயற்றிய திருத்தொண்டர் புராண சாரம், அகஸ்திய மகாமுனிவர் செய்த அகஸ்திய சிவபக்த விலாசம், உபமன்யு மகாமுனிவர் செய்த உபமன்யு சிவபக்த விலாசம் ஆகியவைகளாகும். அவைகளில் ஒன்றிலா வது மேற்குறிப்பிட்ட வினாக்களுக்குத் தகுந்த விடை கள் கிடைக்கவில்லை. அவைகளில் ஒன்றாவது ஏனதி நாதரது வாழ்க்கை வரலாற்றில் இயற்கையாக எழக் கூடிய மேற்குறித்த விஷயங்களைத் தெளிவாகக் கூறவில்லை. அதனால் அந்நூல்கள் இயற்றிய பெரியார்

கள் மீது குற்றஞ் சொல்வதற்கில்லை. மேனாட்டாரைப்போல், சமயப் பெரியார்களது வரலாறுகளையோ, பேரறிஞர்களது வரலாறுகளையோ செம்மையாக எழுதி வைக்கும் வழக்கம் நம் நாட்டாரிடம் இருந்ததில்லை; பல நாடுகளின் நாகரிக முறைகளும், ஆராய்ச்சி அறிவும், அரசியல் ஞானமும் பரவியுள்ள இவ் விருபதாம் நூற்றாண்டிலேயே சமயப் பெரியார்கள், பெரும் புலவர்கள் ஆகியவர்களுடைய வரலாறுகளை ஒழுங்காக எழுதி வைக்கும் வழக்கம் இன்னும் சரியாக வேரூன்றவில்லை யென்றால், வேத முதலிய விழுமிய நூல்களையும் ஒருவர் வாயிலாக மற்றொருவர் படனஞ் செய்துவரும் வழக்கத்தை யுடைய அக்காலத்தில் எவ்வாறு இருந்திருக்கப் போகிறது? எனவே, ஏனாதிநாத நாயனாரது வாழ்க்கை வரலாறு தெளிவாகக் கூறப்படாததில் ஆச்சரிய மொன்றுமில்லை. நல்லிசைப் புலவரான திருவள்ளுவர், தொல்காப்பியர், நக்கீரர், கம்பர் போன்றவர்களது சரித்திரங்களும் இதுவரை சரியாக வகுத்துக் கூறப்படா திருப்பதற்கு இதுவே காரணமாகும். நமது சமயப் பெரியார்கள், புலவர்களது சரித்திரங்க ளெல்லாம் பலகாலமாக நம் நாட்டில் கர்ன பரம்பரையாக வழங்கிவரும் கதைகளைக் கொண்டே எழுதப்பட்டிருக்கின்றன வென்பதற்கு, தமிழ் நாவலர் சரிதை, புலவர் புராணம் ஆகிய நூல்களே போதிய சான்றாகும்.

ஏனாதிநாத நாயனார் ஒரு சிவனடியார் என்று நமக்கு முதன் முதலாகத் தெரிவித்தவர் சைவ சமயாசிரியர் நால்வரில் ஒருவராகிய ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகளேயாவர். அவர் திருவாரூர் என்னுந் திவ்விய க்ஷேத்

திரத்தில் எழுந்தருளியிருக்கும் புற்றிடங் கொண்ட பெருமானை வணங்கச் சென்றபோது, அங்கு தேவா சிரியன் மண்டபத்தில் வீற்றிருந்த சிவனடியார்களை முதலில் தொழாது சென்றார். அதைக் கண்ட விறன் மிண்டர் என்னும் பெயருடைய நாயனார் ஸ்ரீ சுந்தர மூர்த்தி சுவாமிகள் மீது கோபங்கொண்டு, "இவ்வன் றொண்டரும், இவரை வலிய ஆட்கொண்ட சிவ பெருமானும் அடியார் திருக்கூட்டத்துக்குப் புறகு" என்று கூறினர். இம்மொழியைச் செவியுற்ற ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் தாம் அறியாது செய்த பிழையை உணர்ந்து வருந்தி சிவபெருமானிடம் முறையிட்டார். இறைவன் அவ் வடியார்களின் பெருமையை யருளி அவர்களைப் புகழ்ந்து பாடுமாறு கட்டளையிட்டு,

"தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்"

என்று அடியெடுத்துக் கொடுத்தார்.

ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் அவ்வடியார்களைத் தொழுது,

"திருநீல கண்டத்துக் குயவனார்க்கு அடியேன்"

என்று தொடர்ந்துபாடி "திருத்தொண்டத் தொகை" பாடி முடித்தார். அவ்விதம் பாடிய அத் "திருத் தொண்டத் தொகை"யில்,

"ஏனாதிநாதன் தன் அடியார்க்கும் அடியேன்"

என்று நம் ஏனாதிநாத நாயனாரைப் பற்றிப் பிரஸ்தா பித்து, அவரையும், அவரது அடியார்களையும் கூட வணங்குவதாகக் கூறுகிறார். இத் தொடரி லிருந்து

ஏனதிநாதரைப் பற்றி ஏனதிநாதரென்ற பெயருடைய ஒரு சிவனடியார் இருந்தா ரென்பதைத் தவிர வேறு நாம் என்ன அறிந்துகொள்ள முடியும்? ஒன்றுமே தெரிந்துகொள்ள வியலாது.

ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு அடுத்தபடியாக, அவரைவிட நமக்கு ஏனதிநாதரைப் பற்றி அதிகமாகத் தெரிவித்தவர் நம்பியாண்டார் நம்பியாவர். அவர்,

"பத்தனை ஏனதி நாதனைப் பார்நீடு எயினை தன்னுள்
அத்தனைத் தன்னேடு அமர்மலைந்தான் நெற்றி நீறு கண்டு
கைத்தனி வாள்வீடு ஒழிந்தவன் கண்டிப்ப நின்று அருளும்
நித்தனை ஈழக்குல தீபன் என்பர் இந்நீள் நிலத்தே"

என்ற பாடலால் நமது ஏனதிநாதரைப் போற்றிப் புகழ்கிறார். இதில் ஏனதிநாதர் எயினை என்னு மூரில் பிறந்து வாழ்ந்தவ ரென்றும், தம்மோடு போர் புரிந்தவனது நெற்றியில் திருநீறு துலங்குவதைக் கண்டு, செயலொழிந்து, பாதகச் செயல் செய்ய முற்பட்டமையால் மோக்ஷலோக இன்பத்தை இழந்த எதிரியின் வாளுக்குத் தம் தலையைக் கொடுத்து நின்று என்றும் அழியாப் புகழைப் பெற்றவ ரென்றும், உலகத்தார் அவரை 'ஈழகுல விளக்கு' என்று பாராட்டிப் பேசுவர் என்றும் நம்பியாண்டார் நம்பி குறிப்பிட்டிருக்கிறார்.

இனி, இத் "திருத்தொண்டத் தொகை", "திருத்தொண்டர் திருவந்தாதி" ஆகிய விழுமிய நூல் களில் காணப்பட்ட குறிப்புகளை ஆதாரமாக வைத்துக் கொண்டு, கர்ன பரம்பரையாகக் கூறப்பட்டு வந்த கதைகளைத் தொகுத்து, அவற்றில் கொள்ள

வேண்டியவற்றைக் கொண்டு, தள்ள வேண்டியவற்றைத் தள்ளி, நமது ஏனாதிநாத நாயனார் புராணத்தைக் கூடுமான வரை விரிவாகப் பாடியிருப்பவர் சேக்கிழார் பெருமானவர். எனவே, சேக்கிழார் பெரிய புராணத்துக்கு முதல்நூல் 'திருத்தொண்டத் தொகை' யும், வழி நூல் "திருத்தொண்டர் திருவந்தாதி" யும் ஆகும். இவ்விரண்டையும் தமக்கு ஆதாரமாகக் கொண்டு பாடியதனால் தான், சேக்கிழார் பெரியபுராணத்தைச் சார்பு நூலென்பர் பெரியோர். சேக்கிழார் திருவாக்கைப் பெரிதும் ஆதாரமாகக் கொண்டே நாம் நம் தலைவர் ஏனாதிநாத நாயனாரது சரித்திரத்தை எழுதியிருக்கிறோம்.

சேக்கிழார் இயற்றிய பெரிய புராணத்தை பொட்டி, சேக்கிழார் பெருமானையும் பெரிய புராணத்தையும் பாராட்டும் முறையில், சைவ சமய சந்தான ஆசாரியர்கள் நால்வரில் ஒருவராகிய கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியார் "திருத்தொண்டர் புராண சாரம்" என்று சுருக்கமாக ஒரு நூல் இயற்றி யிருக்கிறார். அத்துடன் அவர், அறுபத்து மூன்று நாயன்மார்களுடைய புனிதசரித்திரங்களைப் "பெரிய புராணம்" என்னும் தனிப்பெருஞ் செந்தமிழ் நூல் வாயிலாக உலகுக்கு அளித்த வள்ளல் சேக்கிழார் சரிதத்தைப் புராணமாகப் பாடி யிருக்கிறார். அதற்குச் "சேக்கிழார் புராணம்" என்று பெயர்.

உமாபதி சிவாசாரியார் மேற்குறித்த நூல்களேயன்றி, சைவ சித்தாந்தத்தின் உண்மைகளை நன்கு விளக்கிப் பல சாஸ்திர நூல்கள் செய்திருக்கிறார். சைவ சித்தாந்த சாஸ்திரங்கள் பதினான்கில் பெரும்

பாலன இவருடையனவே யாகும். சந்தான ஆசாரி யர்களில் முதல்வராகிய வெண்ணெய் நல்லூர் மெய் கண்ட தேவர் அருளிய "சிவஞான போதம்" என்னுந் தெள்ளமுத நூலையும், அருணந்தி சிவாசாரியார் இயற்றிய "சிவஞான சித்தியார்" என்னுஞ் சிறந்த நூலையும் தழுவி, உமாபதி சிவாசாரியார் சுருக்கமாக வும், எல்லார்க்கும் விளங்கும்படியாகவும் "சிவப்பிர காசம்" என்னும் அருமையான நூலை நம்மனோர்க்குத் தந்திருக்கிறார். "திருவருட் பயன்," "வினா வெண்பா" "போற்றிப் பஃறொடை", "நெஞ்சு விடுதூது", "உண்மை நெறி விளக்கம்," "சங்கற்ப நிராகரணம்" ஆகிய சாஸ்திர நூல்களும், "கோயிற் புராணம்" "திருமுறைகண்ட புராணம்", "திருப்பதிக் கோவை" முதலிய நூல்களும் அவர் செய்தனவே யாகும்.

இத்தகைய பெரியார் உமாபதி சிவாசாரியார் தாம் இயற்றிய "திருத்தொண்டர் புராண சாரம்" என்னும் நூலில், நமது ஞானக் கொழுந்தான ஏனாதிநாதப் பெருமானின் வாழ்க்கை வரலாற்றைக் கீழ்வரும் விருத்தப் பாவில் எவ்வளவு அழகாகச் சித்திரித்திருக் கிறார் என்பதை யறிந்து மகிழுங்கள்.

"ஈழக்குலச் சான்றார் எயினனூர் வாழ்ஏனாதி
நாதனார் இறைவன் நீற்றைத்
தாழ்த்தொழும் மரபார் படைகள்ஆற்றுந் தன்மை
பெறஅதிசூரன் சமரில் தோற்று
வாழத் திருநீறு சாத்தக்கண்டு மருண்டார்
தெருண்டார் கைவாள் விடார்நேர்
வீழக் களிப்பார் போல்நின்றே யாக்கை
விடுவித்துச் சிவன்அருளே மேவினாரே."

உமாபதி சிவாசாரியாரைத் தவிர, வேறெந்த கவிஞ ராலும், ஒரு செய்யுளில் இவ்வளவு அழகாக நமது ஏனாதிநாதரது வாழ்க்கைச் சித்திரத்தைத் தீட்ட முடியாது என்பது என்னுடைய தாழ்மையான கருத்து. 'பக்திச்சுவை நனிசொட்டச் சொட்டப் பாடும்' பேராற்றல் வாய்ந்த சேக்கிழாருக்கு அடுத்த படியாக, உமாபதி சிவாசாரியாரால் தான் சிவனடியா ரது திவ்விய சரித்திரங்களை அப்படியே படம் பிடித் துக் காட்ட முடிந்தது என்பதைப் பேரறிவாளர்கள் ஒப்புக்கொள்வர்.

பொருமை காரணமாக தம்மை வினைகப் பகைத்து வலிய ஒரு முறைக்கு இருமுறை சண்டைக்கு வந்த அதிசூரனது நெற்றியில் திருநீறு மிளிர்வதைக் கண்டதும், சுத்த வீரரும், ஞானச் செல்வருமான ஏனாதிநாதர் துணிந்த மாறுதலை,

" ....படைகள் ஆற்றுந் தன்மை
பேறஅதிசூரன் சமரில் தோற்று
வாழத் திருநீறு சாத்தக்கண்டு மருண்டார்
தெருண்டார் கைவாள் விடார்நேர்
வீழக் களிப்பார் போல்நின்றே யாக்கை
விடுவித்துச் சிவன்அருளே மேவினர் "

என்ற அடிகளால் மிக நயமாகக் கூறியிருப்பது அறிஞர்கள் படித்துணர்ந்து மகிழத்தக்கதாகும்.

சேக்கிழார் பெருமான் இயற்றிய பெரியபுராணத் தைப் பின்பற்றியே, "அகஸ்திய சிவபக்த விலாச" மும், "உபமன்யு சிவபக்த விலாச"மும் சமஸ்கிருத மொழியில் இயற்றப்பட்டிருக்கின்றன. இவ்விரு நூல் களும் சேக்கிழார் பெரியபுராணத்துக்கு முற்பட்டன

என்பது ஒரு சிலர் கருத்து. அதுவன்றி, பெரிய புராணத்துக்கு முதனூல் "அகஸ்திய சிவபக்த விலாச" மென்று ஒரு சாராரும், "அன்று, அன்று; "உபமன்யு சிவபக்த விலாச"த்தைப் பார்த்தே சேக்கிழார் பெரிய புராணத்தைத் தமிழில் மொழிபெயர்த்து பாடியிருக்கிறார். ஆகவே, இதுதான் பெரிய புராணத்துக்கு முதனூல்" என்று மற்றொரு சாராரும் வாதிக்கின்றனர். இவர்கள் கூற்றுக்கு ஆதாரமாக, பெரிய புராணத்தில் திருமலைச் சிறப்பில் 13-வது பாடலிலிருந்து 37-வது பாடல்வரை இடைச் செருகலாகவுள்ள வெள்ளிப் பாடல்களை எடுத்துக் காட்டுவர்.

நம் நாட்டில் "தமிழ் மொழியிலுள்ள இலக்கிய இலக்கண புராணேதிகாச காவியங்க ளெல்லாம் தேவ பாஷையாகிய சமஸ்கிருதத்தி லிருந்தே மொழிபெயர்க்கப் பட்டவை; தமிழ் மொழிக்கென தனி நூலொன்று மில்லை" என்ற மூடக் கொள்கை நீண்ட நாட்களாக நிலவி வந்திருக்கிறது. இது தவறான கொள்கை. வேதாகம புராணேதிகாசங்க ளெல்லாம் சமஸ்கிருத மொழியில் தான் இருக்கின்றன என்பது உண்மை. அதுபோலவே, தமிழ் மொழியிலும் இலக்கிய இலக்கணங்களும் புராண காவியங்களும் பல உள; அவ்வாறில்லை என்று எளிதில் மறுக்க முடியாது. தொல்காப்பியம் தமிழ் மொழிக்கே உரிய சிறந்த இலக்கண நூலன்றோ? திருக்குறளுக்கு ஒப்பாக சமஸ்கிருதத்தில் எந்த நீதிநூ லிருக்கிறது? சிலப்பதிகாரம், மணிமேகலை, சிவகசிந்தாமணி போன்ற தமிழ்க் காவியங்களுக்கு முதனூல்கள் எவை யென வடமொழியில் காட்ட முடியுமா? சிவஞான போத மென்னுஞ் செந்

தமிழ் சாஸ்திர நூலுக்கு இணையாக வேறெம்மொழியி லேனும் உண்டோ? ஆகவே தமிழ் மொழியிலுள்ள நூல்களெல்லாம் சமஸ்கிருதத்திலிருந்துதான் உண்டானவை எனக்கூறுவது எவ்வாறு பொருந்தும்? என்று என்போன்றார் கேட்டால் அதற்குத் தகுந்த பதில் சொல்ல முடியாது திகைக்கின்றனர். சமஸ்கிருத மொழி மீது மிக மோகங்கொண்ட ஒரு சிலர் மெய்கண்டதேவர் அருளிய சிவஞான போதத்தையும், திருவள்ளுவர் திருக்குறளையும் சமஸ்கிருதத்தில் மொழிபெயர்த்து வைத்துக்கொண்டு, இவைதான் ஆதி நூல்களென்றும், இவைகளைப் பார்த்தே தமிழில் மொழிபெயர்க்கப் பட்டிருக்கின்றன என்றும் கூறி வாதாடி நிலைநாட்டப் பார்க்கின்றனர். சமீப காலத்திலேயே இவ்வளவு மோசம் நடைபெறுமானால், சில நூற்றாண்டுகளுக்கு முன் இயற்றப்பட்ட சேக்கிழார் பெரிய புராணத்தைப் பார்த்து யாரோ ஒருவர் சமஸ்கிருதத்தில் மொழிபெயர்த்து, 'அகஸ்திய சிவபக்த விலாச'மென்றும், 'உபமன்யு சிவபக்த விலாச' மென்றும் பெயரிட்டு வெளியிடுவதுதானா பிரமாதமான காரியம்? அவ்வாறு பெரிய புராணத்தைப் பார்த்து மேற்படி இரு நூல்களையும் மொழி பெயர்த்தவர்கள் அதை மிகத் தொன்மையான நூல்கள் என நிலைநாட்டுவதற்காக, அகஸ்திய முனிவர் பெயரையும், உபமன்யு முனிவர் பெயரையும் அவற்றோடு இணைத்து அவர்களால்தான் அவை முறையே இயற்றப்பட்டன எனக் கூறி வருகின்றனர்.

இவர்கள் கூறும் கூற்று உண்மையானால், அறுபத்து மூன்று நாயன்மார்களும், அகஸ்திய முனிவர், உப

மன்யு முனிவர் ஆகிய இருவரும் வசித்து வந்த காலத்துக்கு முன்பே இருந்திருக்க வேண்டும். அப்படி யிருந்திருந்தால்தான் அவர்களது வாழ்க்கை வரலாறுகளை இம்முனிவர்கள் பாடி யிருக்க முடியும்? ஆனால், அகஸ்திய முனிவர் சுமார் ஆறாயிரம் வருஷங்களுக்கு முன் இருந்திருக்க வேண்டுமென்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். உபமன்யு முனிவரைப் பற்றிப் புராணங்களில் வெகுவாகப் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தாலும், அவர் எந்த நூற்றாண்டில் இருந்தார் என்ற விஷயம் சரித்திர ஆராய்ச்சிக்கு உட்படவில்லை.

கிறிஸ்து பிறந்து ஆறுவது நூற்றாண்டில் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளும், திருநாவுக்கரசு சுவாமிகளும், எட்டாவது நூற்றாண்டில் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் முறையே தோன்றினார்கள் என ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். கல்வெட்டு, சிலாசாசன ஆராய்ச்சி முடிவுகளைக் கொண்டு பார்த்தாலும், கால ஆராய்ச்சியில் அகப்பட்ட மற்ற நாயன்மார்கள்கூட கி. பி. முதல் நூற்றாண்டிற்கு அப்புறந்தான் இருந்ததாகத் தெரிகிறது. எனவே, சுமார் 1000 அல்லது 1500 வருஷங்களுக்கு முன் உலகில் தோன்றி வாழ்ந்து வந்தவர்களது வாழ்க்கை வரலாறுகளை ஏறக்குறைய 6000 வருஷங்களுக்கு முன்னிருந்ததாகக் கூறப்படும் அகஸ்திய முனிவர் எவ்வாறு பாடியிருக்க முடியும்? அல்லது கால எல்லைக்குள் அகப்படாத உபமன்யு முனிவர்தான் எவ்விதஞ் சூத்திரஞ் செய்திருக்க முடியும்? இவ்வாதாரமற்ற கூற்றுக்களி லிருந்தே அகஸ்திய சிவபக்த விலாசமும், உபமன்யு சிவபக்த விலாசமும் சேக்கிழார் பெரிய புராணத்துக்கு முற்பட்ட நூல்களல்ல வென்

றும், யாரோ இரு வடமொழிப் புலவர்களால் பிற் காலத்தே பெரிய புராணத்தைப் பார்த்து மொழி பெயர்த்து சூத்திரஞ் செய்யப்பட்டிருக்க வேண்டு மென்றும் நன்கு புலப்படுகிற தல்லவா!

எது எவ்வாருயினும், நமது ஏனுதிநாத நாயனுர் காலம், மேற்குறிப்பிட்ட நூல்களில் எவற்ருலும் கூறப் படவில்லை; அவரது தாய் தந்தையர் இன்னுர்? அவர் பிரம்மசாரியா? இல்லறவாசியா? என்பன போன்ற விஷயங்களும் அந்நூல்களால் விளக்கப்படவில்லை. கல்வெட்டு, சிலாசாசன ஆராய்ச்சிகளிலும் இவரைப் பற்றிய செய்தி யொன்றும் யான் பார்த்தவரையில் இதுவரை கிடைக்கவில்லை. எந்த அறிஞருக்கேனும் இவரைப் பற்றிய தகவல் கிடைத்திருக்குமாயின் அல்லது கிடைக்குமாயின் அன்புகூர்ந்து எனக்கு அனுப்பி வைத்தால், அடுத்த பதிப்பில் அதைச் சேர்த்து வெளி யிடப் பேருதவியா யிருக்கும்.

சமயாசாரியர்களில் ஒருவராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் நமது ஏனுதிநாத நாயனுரைப்பற்றித் தாம் பாடிய "திருத்தொண்டத் தொகை" யில் குறிப் பிட் டிருப்பதால், அவரது காலத்துக்கு முன் இவர் இருந்திருக்க வேண்டுமென்பது மட்டும் நிச்சயம். சுந்தரமூர்த்தி சுவாமிகள் எட்டாவது நூற்ருண்டில் வாழ்ந்தவர். எனவே, ஏனுதிநாத நாயனுர் அவர் இருந்த காலத்துக்குக் குறைந்தது இரண்டு மூன்று நூற்ருண்டுகளுக்கு முன்பாவது இருந்திருக்க வேண்டும்.

ஏனுதிநாதர் பெற்ருேர் உற்ருர் யாரெனத் தெரிய வில்லை. ஏனுதிநாதரும், அவரது பகைவனுன அதி

சூரனும் தாயாதிகள் எனப் பொதுவாகக் கருதப்பட்டு வருகிறது. இதுவே உண்மையாகவும் இருக்கலாமென நான் நம்புகிறேன். ஏனாதிநாதரது தாயாரும், அதிசூரனது தாயாரும் உடன் பிறந்த சகோதரிகள் என்று அகஸ்திய சிவபக்த விலாசங் கூறுகிறது. அத்துடன் ஏனாதிநாதர் சைவரா யிருந்தது போல, அதிசூரன் இல்லாது பௌத்த சமயத்தை மேற்கொண்டவனெனவுங் கூறப்படுகிறது. இப்போதுள்ள நிலையில், இவ்வளவுதான் நாம் நம் ஏனாதிநாதரையும், அதிசூரன் முதலியவர்களையும் பற்றி அறிந்துகொள்ள முடிகிறது.

II

அரச குலத்தார் என்பதற்கு ஆதாரம்

ஏனாதிநாதர் படைக்கலம் பயிற்றுவிக்கும் ஆசிரியத் தொழிலை மேற்கொண்டு வாழ்ந்தார் என்றும், அவரது தாயாதியான அதிசூரனும், மற்றும் உறவினர்களும் அப் போர்க் கருவி கற்பிக்கும் தொழிலையே கைக்கொண்டிருந்தனர் என்றும் கூறப்படுவதிலிருந்து, ஒரு உண்மை நன்கு வெளியாகிறது. அதாவது ஏனாதிநாதரும், அதிசூரன் முதலியோரும் அரச குலத்தினரே யென்றும், அரச குலத்தாருக்குச் சான்றோர் அல்லது கிராமணி, நாடார் என்ற சாதிப் பட்டப் பெயர்கள் அக்காலத்தில் வழங்கிவந்தனவென்றும் அறிகிறோம். தற்காலத்தில், பிற சாதியாரைக் கேவலமாக இழிவுபடுத்திக் கூறுவதையே தொழிலாகக் கொண்ட ஒரு சில சுயநலக்காரர்கள்—சாதிச் செருக்கு

கொண்டவர்கள்—கூறுவது போன்று, சான்றோர் குலத்தினர் ஜனசமூகத்துக்கே தீங்கு பயப்பிக்கும் இழி தொழிலாகிய கள்ளிறக்குந் தொழிலையும், அக் கள்ளை விற்கும் வியாபாரத்தையும் பரம்பரையாகக் கொண்டிருக்கவில்லை. காலச் சக்கரஞ் சுழன்றோடும் வேகத்தில், உன்னத நிலையிலிருந்த அரச குலத்தினராகிய சான்றோர் கீழ்நிலையை யடைந்தனர்; அவர்களில் சிலர் பிழைக்க வேறு வழி யறியாமையால், மற்றும் சில சாதியாரைப்போல் கள்ளிறக்குந் தொழிலையும், கள் விற்கும் வியாபாரத்தையும் மேற்கொண்டனர். உலக சரித்திரத்தை ஊன்றி நோக்குவோர்க்கு, ஒரு நாடு மிக உன்னத நிலையிலிருந்து தாழ்ந்த நிலை யடைவதும், ஒரு சமூகம் அல்லது சாதி மேல் நிலையிலிருந்து இழிநிலை யடைவதும் இயற்கை என்பது புலப்படும். ஆகவே, அரச குலத்தினரான சான்றோர் கள் விற்றல் முதலிய பல்வேறு தொழில்களைக் கைக்கொண்டு வாழ்ந்து வருவதில் ஆச்சரிய மொன்றுமில்லை; வீண் வம்புப் பேச்சு பேசுவதற்கும் இடமில்லை.

ஏனாதிநாதரும், அவரது சந்ததியாரும் அரச குலத்தினராய்த் தான் இருத்தல் வேண்டும் என்று நான் அறுதியிட்டு உறுதி கூறுவதற்கு என்ன ஆதாரம் என்று சிலர் கேட்கலாம். ஏனாதிநாதர் வாழ்ந்த காலம் ஆரியர் ஆதிக்கம் மிக உச்ச நிலையில் வேரூன்றி விட்ட காலம் என்று துணிய இடமிருக்கிறது. ஆரியர் நாகரிகமும், கடவுட் கொள்கையும், வருணாசிரம தருமமும், மற்றும் பழக்க வழக்கங்களும் தமிழ் மக்களிடையே நன்கு பரவி ஆட்சி செலுத்தி வந்தன என்று கூறின் மிகையாகாது. அச்சமயத்தில் ஆரிய

ரும், தமிழரும் ஒன்று கலந்து இரத்த சம்பந்தம் ஏற்பட்டு விட்டது என்றுகூடச் சொல்லலாம்.

வடக்கே இருந்து வந்த ஆரியர் நமது தென் தமிழ் நாட்டில் குடியேறிய பிறகே, அர்த்தமற்ற சாதிபேதமும், சாதிகளின் உயர்வு தாழ்வுகளும் உண்டாயின. அந்த ஆரியர்களே பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்ற நான்கு வருணங்களை ஏற்படுத்தினர். இவ்வுண்மையை வெளிப்படுத்தவே, கபிலர் என்னும் பெரியார் தமக்கு உபநயனஞ் செய்ய மறுத்த ஆரியப் பிராமணர்களை நோக்கி,

> " பார்ப்பன மாந்தர்காள்! பகர்வது கேண்மின்!
> ....
> ஓட்டியர் மிலேச்சர் ஊணர் சிங்களர்
> இட்டிடைச் சோனகர் யவனர் சீனத்தர்
> பற்பலர் நாட்டினும் பார்ப்பார் இல்லையால்
> முற்படைப் பதனில்வே றுகிய முறைமைபோல்
> நால்வகைசாதி இந்நாட்டினில் நாட்டினீர் "

என்று இடித்துக் கூறினர். பிறப்பிலேயே பேதத்தைக் கற்பித்த ஆரியர் தங்கள் வருணாசிரம தருமக் கொள்கையை, மநுதர்ம சாஸ்திரம் போன்ற தரும சாஸ்திரங்களிலும், மற்றும் பல நூல்களிலும் வலியுறுத்தி நிலைநாட்டி வந்தனர். அவ் வாரியர்கள் வகுத்த வருணாசிரம தருமமே, இப்போது நம் நாட்டில் கணக்கற்ற சாதிகளை யுண்டுபண்ணி யிருக்கிறது என்பதை ஆராய்ச்சி யுணர்வுடைய அறிஞர்கள் ஒப்புக்கொள்வர். சமஸ்கிருதத்தில் மகா மேதாவியும், ஆங்கிலப் பேராசிரியருமான டாக்டர் ஜி. பந்தர்க்கார் 1894-ம் வருஷத்தில் சென்னை நகரில் நடைபெற்ற சமூக சீர்திருத்தக்

கூட்ட மொன்றில், "ஆதிகாலத்தில் ஜாதிபேதம் இருந்த தில்லை. அது வேத காலத்தின் அந்தத்தில் ஏற்பட்ட தாகத் தோன்றுகிறது. அது முதலில் தொழிற் பற்றி ஏற்பட்ட பேதத்தினல் உண்டாகத் தொடங்கி யது..........,...ஆனாலும் ஆரம்பத்தில் அச்சாதிகளைப் பற்றிய விதிகள் பிற்காலத்திலானது போல அவ்வளவு கடினமாகி விடவில்லை...........ஜாதி இப்போது எப்படியா யிருக்கிற தென்பது சொல்ல வேண்டுமோ? நாலு சாதியும் இப்போது நாலாயிரஞ் சாதிகளா யிருக்கின்றன வென்று சொல்லலாம்" என்று குறிப் பிட்டுப் பேசியிருப்பதை வாசக நேயர்கள் கவனிக்க வேண்டும்.

இவ்வாறு ஆரியர்கள் தாங்கள் வகுத்த வருணத் தார்க்கு இன்ன தொழில்தான் உரியது என்று வரை யறுத்து விதித்தனர். அம்முறைப்படி, பிராமணர் ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்னும் அறு தொழிலை யுடைய ராயினர். க்ஷத்திரியர் ஓதல், வேட்டல், ஈதல், காத்தல், படை பயிற்றல், தண்டஞ் செய்தல் ஆகிய அறுவகைத் தொழிலை யுடைய ராயினர். வைசியர் ஓதல், வேட்டல், ஈதல், உழவு, நிரையோம்பல், வாணிகம் முதலிய அறு தொழிலை யுடைய ராயினர். சூத்திரர் மேற்கண்ட மூன்று வருணத்தார்க்கும் தொண்டு செய்தலும், உழவு முதலிய பல தொழில்களைச் செய்து அவர் களுக்குத் தேவையானவைகளை யளித்தலுமே கடமை யாக வுடையராயினர்.

க்ஷத்திரியர்க் குரிய தொழில் இன்ன தென்பதை சூடாமணி நிகண்டுடையாரும்,

“ஓதலே வேட்டல் ஈதல்
உலகோம்பல் படை பயிற்றல்
மேதகு போர்செய் தீட்டல்
வேந்தர்செய் தொழிற்க ளாறும்.”

என அறுதியிட்டு உறுதி கூறியிருக்கிறார். தமிழ் வேதமாகிய திருக்குறளுக்கு உரை யெழுத வந்த பரிமேலழகரும் அரசியலில் கல்வி என்னும் அதிகாரத்தை வைத்ததற்குக் காரணங் கூறி உரை யெழுதுகையில், “கல்வி என்பதற்கு அரசன் தான் கற்றற்குரிய நூற்களைக் கற்றல்; அவையாவன: அறநூலும், நீதிநூலும், யானை, குதிரை, தேர், படைக்கலம் என்பவற்றின் நூற்களும் முதலாயின” என விரிவுரை செய்தார்.

இன்னோரன்ன காரணங்களைக் கொண்டும், பண்டை நூல் சான்று கொண்டும் பார்த்தால், ஆரியர் வகுத்துச் சென்றபடி, படைக்கலம் பயிற்றுந் தொழிலை மேற்கொண்டிருந்த ஏனதிநாத நாயனரும், அதிசூரன் முதலிய அவரது உறவினர்க ளெல்லோரும் க்ஷத்திரியர்கள் அல்லது அரச குலத்தினர்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை யன்றே!

மேலும், பெரிய புராணம் பாடிய சேக்கிழார் பெருமான், ஒவ்வொரு குலத்தில் பிறந்த நாயன்மாருக்கும் அந்தந்த சாதிக்குரிய (பிறப்புப்பற்றி ஆரியர் உண்டாக்கிய சாதிப் பிரிவுப்படி) தொழிலைக் குறிப்பித்திருக்கிறார். அத்துடன் அந் நாயன்மார் அவர்கள் பிறந்த சாதிக்குரிய தொழிலைச் செய்துகொண்டிருந்தே சிவ பக்தியு முடையவரா யிருந்து வீடு பேற்றை யடைந்தார்க ளென்றும் பெரிய புராண ஆசிரியர் அருளியிருக்

கிறார். வேளாளர் குலத்துதித்த இளையான்குடிமாற நாயனார் உழு தொழிலை செய்துகொண்டே தம்மை நாடி வரும் சிவனடியார்க்கு அமுது செய்வித்து அனுப்பி வந்ததும், குயவராகிய திருநீலகண்ட நாயனார் மட்பாண்டம் முதலியவை செய்து விற்று உயிர் வாழ்ந்து வந்ததோடு, சிவனடியார்க்குத் திருவோடு செய்து கொடுத்து வந்ததும், பரதவர் (செம்படவர்) வம்சத்தில் தோன்றிய அதிபத்த நாயனார் மீன் பிடிக்குந் தொழிலை மேற்கொண் டிருந்ததோடு தினந் தோறும் தாம் பிடிக்கும் மீன்களி லொன்றைச் சிவ பெருமானுக்கு அர்ப்பணம் செய்து வந்ததும், வண்ணார் வகுப்பைச் சேர்ந்த திருக்குறிப்புத்தொண்ட நாயனார் சிவனடியார்க்குத் துணி வெளுத்துக் கொடுப் பதையே புண்ணிய கைங்கரியமாகக் கொண்டிருந்ததும், பாணர் மரபில் உதித்த நீலகண்ட யாழ்ப்பாணர், திருஞானசம்பந்தப் பெருமானோடு இருந்து அவர் பாடும்போதெல்லாம் யாழ் வாசித்து பெருமை பெற்றதும் ஆகிய இதுபோன்ற நாயன்மார் சரிதங்களே மேற்கூறிய கூற்றுக்குப் போதிய சான்றாகும்.

அப்படி யிருக்க, ஏனாதிநாத நாயனார் கள்ளிறக்குந் தொழிலை மேற்கொண்ட சாதியில் பிறந்தவரா யிருந்தால்—இக் காலத்து கருதப்படுவதுபோல்—ஒரு சிலர் செய்து வருவதுபோல்—சான்றார் வம்சத்திற்குக் கள்ளிறக்குந் தொழில் அல்லது கள் விற்குந் தொழில் உரியதாயிருந்தால்—மற்ற நாயன்மார் வரலாற்றில் கூறியதுபோல், சேக்கிழார் இவர் வரலாற்றிலும் கள்ளிறக்குந் தொழிலையோ அல்லது கள்விற்குந் தொழிலையோ இவர் கொண்டிருந்தார் என்றும், அத்துடன்

சிவ பக்தியும், சிவனடியாரிடத்துப் பேரன்புங் கொண்டிருந்து மேற்படி தொழில் வாயிலாகத் தமக்கு வரும் ஊதியத்தை யெல்லாம் சிவபெருமானுக்கும், சிவனடியார்களுக்குமே அர்ப்பணஞ் செய்து வந்து அதன் பயனாக, மோட்சமடைந்தாரென்றும் அல்லவோ கூறியிருப்பார் ? அவ்வாறில்லாது, ஏனாதிநாத நாயனார் படைக்கலம் பயிற்றும் ஆசிரியத் தொழிலை மேற்கொண்டிருந்தா ரென்றும், அதில் வரும் ஊதியத்தை யெல்லாம் சிவனடியார்க்கே செலவிட்டு வந்தாரென்றும், தன் பகைவனே யென்று அறிந்தும் அதிசூரன் தன் நெற்றியில் வெண்ணீறு அணிந்திருக்கிறான் என்ற காரணத்திற்காக அவனோடு போர் செய்வதை விடுத்து, அவன் குறிப்பின் வழி நின்று முத்தி பெற்றாரென்றும் சேக்கிழார் விளக்கமாகக் கூறியிருப்பதனால், ஏனாதிநாதர் அரச குலத்தினராகவே இருத்தல் வேண்டு மென்பது திண்ணம். ஏனென்றால், வருணாசிரம தருமக் கொள்கை ஆதிக்கம் பெற்றிருந்த அக்காலத்தில் போர்க்கருவி பயிற்றுந் தொழில் அரச குலத்தார்க்கே உரிய தொழிலாக இருந்தமையால் என்க. அரச குலத்தார்க்கு அடுத்தபடியாக, அக்காலத்தில் ஆமாத்திய பிராம்மணர்கள் படைக்கலம் பயிற்றுந் தொழிலை மேற்கொண்டிருந்தார்க ளென்று தெரிகிறது.

“ அன்று; அன்று. உமது வாதம் பொருந்தாது. ஏனாதிநாதர் படைக்கலம் பயிற்றும் ஆசிரியத் தொழிலை மேற்கொண்டிருந்தார் என்று சேக்கிழார் பெரிய புராணத்தில் பாடியிருப்பது உண்மை. அதனாலேயே அவர் அரச குலத்தார் என்பதெங்ஙனம்? பெரிய

புராணத்திலேயே வேளாளராகிய கோட்புலி நாயனூர் தம் குலத் தொழிலை விட்டு சேனுதிபதியாக இருந்து போர் செய்ததாகக் கூறப்பட்டிருக்கிறது. அது போன்று, ஏனுதிநாத நாயனுரும், ஏன் தம் குலத் தொழிலை விட்டு, படைக்கலம் பயிற்றுந் தொழிலை மேற்கொண் டிருக்கக்கூடாது ?" என்று ஒரு சிலர் கேட்டு எனது கூற்றுக்கு மறுப்பு கூறலாம்.

இம் மறுப்பை நான் ஒருவகையில் ஒப்புக்கொள்ளு கிறேன். எதற்கும் 'புறனடை' என்ப தொன்று உண்டு என்பது எனக்குத் தெரியும். ஏனுதிநாத நாயனுர் வேண்டுமானுல் கோட்புலி நாயனுரைப்போல் தம் குலத் தொழிலைச் செய்யாது படைக்கலம் பயிற்றுந் தொழிலை மேற்கொண்டிருக்கலாம். இது புற னடைக்கு ஒத்ததே; நடை முறைக்குச் சாத்திய மானதே என்பதில் தடையில்லை. ஆனுல் ஏனுதிநாத நாயனுர் புராணத்தில் சேக்கிழார், புராணத் தலைவ ராகிய ஏனுதிநாத நாயனுரே யன்றி அவரது தாயாதி யாகிய அதிசூரனும், மற்றுஞ் சுற்றத்தாருங்கூட படைக்கலம் பயிற்றுந் தொழிலையே மேற்கொண்டிருந்த தாகவும், வீரர்களாகத் திகழ்ந்திருந்ததாகவு மன்றே கூறியிருக்கிருர் ? அது எவ்வாறு சாத்தியமாகும் ? மேலும், சேக்கிழார் ஏனுதிநாத நாயனுர் புராணத்தில்,

> "தள்ளாத தங்கள் தொழிலுரிமைத் தாயத்தின்
> உள்ளான் அதிசூரன் என்பான் உள்னுனுன்"

எனவும்,

> "..........தங்கள் குலத்தாயத்தின்
> ஆனுதசெய் தொழிலாம் ஆசிரியத் தன்மைவள்ம்"

எனவும்,

" நந்தமது வாட்பயிற்றும் நற்றயம் "

எனவும் பாடி, ஏனுதிநாத நாயனூர் வம்சத்தார்க்குப் போர்த்தொழிலே குலத் தொழிலாகும் எனத் தெளிவாகக் கூறியிருக்கிறூர். " தள்ளாத தங்கள் தொழிலுரிமைத் தாயத்தின் " என்றும், " தங்கள் குலத் தாயத்தின் ஆனுத செய்தொழிலாம் ஆசிரியத் தன்மை வளம் " என்றும், " நங் தமது வாட்பயிற்றும் நற்றுயம் " என்றும் சேக்கிழார் பிரயோகித்துள்ள சொற்றொடர்களின் பொருள்களை நடுவுநிலைமையாக நோக்குவார்க்கு அதன் உண்மை இனிது புலனுகும்.

அதுவேயன்றி சேக்கிழார், அதிசூரன் ஏனுதிநாதரைப் போருக் கழைத்தபோது, இவ்விருவருக்கும் இடையே நேர இருக்கும் வாட்போரைக் கேட்டு, இருதிறத்தாரது சுற்றத்தாரும் ஓடிவந்து இருவர் பக்கலிலும் சேர்ந்தார்கள் என்று குறிப்பிடுகையில்,

" மறப்படைவாட் சுற்றத்தார் கேட்டோடி வந்து
சேறற்கரும்போர் வீரர்க்கு இருமருங்குஞ் சேர்ந்தார்கள் "

என்று வருணிக்கிறூர். இச் செய்யுளிலும் சேக்கிழார் ஏனுதிநாத நாயனூரது குலத்தார் ஆயுதத் தொழிலைத் தங்களுக்கே உரிமையாக வுடைய குடி மன்னர்கள் என்பதை " மறப்படை வாட் சுற்றத்தார் " என்ற தொடரில் வைத்து வலியுறுத்தி யிருக்கிறூர்.

அரசாட்சி செய்தலும் போர்புரிதலும் அரச குலத்தார்க்கே உரியதன்றி, மற்ற வருணத்தார்க்கு உரியதன்று என்பதை மேனூட்டுப் பேரறிஞரான ரெவரண்டு எச். போவர் என்னும் கிறிஸ்துவப் பாதிரியார், தாம் இந்திய சமூகப் பிரிவுகளைப்பற்றி யெழுதிய வியாசமொன்றில்,

"The Kshatriyas belong to the second or military class. They are kings and soldiers." *

என்று ஆணித்தரமாகக் கூறியிருக்கிறார்.

சேக்கிழார் இவ்வாறு கூறவில்லை யென்று உண்மையைத் திரித்துக் கூறி மறுக்க முடியுமா? என்று கேட்கிறேன். எதையும் அறிவுக்கும் அநுபவத்திற்கும் தருக்க வாதத்திற்கும் பொருத்தமாகக் கூறினால்தான் உலகம் ஏற்றுக்கொள்ளும். எனவே, சாதிச் செருக்கு கொண்டலையும் பதர்கள்—பிற சாதியாரை இழிவாகக் கூறுவதாலேயே தாங்கள் உயர் சாதியாராய் விடலாம்—பிறர் தங்களை உயர் சாதியார் என்று கருதிக்கொள்வார்கள்—என நினைக்கும் போலிமக்கள்—ஒரு குறிப்பிட்ட சாதியார்மீது கொண்ட துவேஷத்தாலோ, பகையாலோ அச் சாதியாரை இழித்துக் கூறுவதேயல்லாது, அச் சாதியில் உதித்த பெரியார்களையும் வாயில் வந்தவாறு பழித்துக் கேவலமாகக் கூறி நரகினுக் காளாவதை விடுத்து, இனியேனும் அவர்கள் நல்லறிவு பெற்று உலகுக்கு நன்மை புரியும் வழியில் செல்வார்களென்று நம்புவதோடு, அவர்களைத் தீநெறியி னின்றும் விலக்கி நன்னெறியில் செலுத்த வேண்டுமென்றும் எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளை இறைஞ்சுகிறேன்.

"அவ்வாறில்லை; நீர் என்னதான் வாதித்தாலும், பெரிய பெரிய நூல்களை யெல்லாம் ஆதாரங் காட்டினாலும், அகச்சான்று, புறச்சான்றுகளை ஆராய்ந்து எடுத்துக் கூறினாலும், அரச குலத்தார் என்று நீங்கள்

* Vide, Rev. H. Bower's Essay on Hindu Castes. P. 5.

உரிமை கொண்டாடும் ஏனாதிநாத நாயனாரது வழி வழி வந்தவர்களென்று கூறிக்கொண்டாலும் உங்கள் சாதியாராகிய சான்றார் க்ஷத்திரியராக மாட்டார்கள்; க்ஷத்திரியராகவும் முடியாது. உங்கள் சாதிக்குரிய தொழில் கள்ளிறக்குவதே யாகும்; கள் விற்பனை செய்வதேயாகும்; இதை நீங்கள் மறுத்துப் பயனில்லை. ஆகவே, ஜன சமூகத்துக்குக் கேட்டை விளைவிப்பதாகிய கள்ளிறக்கும் ஈனத்தொழிலை மேற்கொண்டிருப்பவர்களாகிய உங்கள் சாதியார் இந்த சமூகத்தில் மிகக் கேவலமாகவே மதிக்கப்படுவர். நீங்கள் தாழ்ந்த சாதியாரே" என்று சாதி யென்னுஞ் சேற்றில் அழுந்திக் கரையேற வழி தெரியாது தத்தளிக்கும் வெறியர்கள் யாரேனும் கூறுவாராயின், அக் கூற்றை நான் நல்வரவேற்கிறேன்.

கள்ளிறக்குந் தொழில் அல்லது கள் விற்குந் தொழில் செய்வதாலேயே சான்றார் குலத்தினர் இழிந்தவராகக் கருதப்படுவாராயின், மேற்படி தொழிலை மேற்கொண்ட மற்ற சாதியாருங் கேவலமாகவன்றோ எண்ணப்படவேண்டும்? உண்மையாக அவர்கள் ஜன சமூகத்தால் இழிவாகக் கருதப்படுகிறார்களா? இல்லவே இல்லை. இந்தியாவில் பல பாகங்களிலும் பல சாதியாரும் இத் தொழிலை மேற்கொண்டிருக்கின்றனர். தங்களை உயர்ந்த சாதியாரென்றும், க்ஷத்திரிய வகுப்பாரென்றுங் கூறிக்கொள்ளும் முதலியார், நாயுடு, நாயகர் முதலிய எல்லா சாதியாரும் இத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றனர். எல்லா சாதியாரிலும் மிக உயர்ந்தார் எனக் கருதப்படும் பிராம்மணர்களில் கூட சிலர் இத் தொழில் முறையில் சம்பந்தப்

பட்டிருக்கிறார்களென்று நான் கூறினால் வாசகர்களில் பலர் ஆச்சரியப்படக்கூடும். அவசியம் நேர்ந்தால், கள் வியாபாரஞ் செய்யும் முதலாளிகளுக்குப் பல வகையிலும் உதவியாக இருந்த பிராம்மணர்களையும், கள்ளிறக்குவோரையும், தென்னந் தோட்டங்களையும் மேற்பார்வை செய்யுந் தொழிலில் ஈடுபட்டிருந்த பிராம்மணர்களையும் உதாரணமாகக் கூற முடியும். இவர்களெல்லாம் சமூகத்துக்குப் பெருந் தீங்கை விளைவிப்பதாகிய கள் தொழிலில் சம்பந்தப்பட்டிருக்குங் காரணத்தால் ஏன் பிற மக்களால் கேவலமாகக் கருதப்படுவதில்லையென்று என்று கேட்கிறேன். ஈனத்தொழிலில் ஈடுபட்டிருக்கும் அவர்களோடு அவர்களது உறவினர்களும், மற்றவர்களும் குலாவவில்லையா? உடன் உண்ணவில்லையா? பெண் கொடுத்து வாங்கவில்லையா? என்று கேட்கிறேன். இத்தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்ற காரணத்துக்காக அவர்களை யாரும் ஒதுக்கவில்லையே! எனவே, இது ஆரியர் வகுத்த வருணாசிரம தருமப்படி பிறப்புப்பற்றிய பிரிவால் ஏற்பட்ட வேற்றுமையே யொழிய, தொழில்பற்றிய வேற்றுமை யல்லவென்று நன்றாக விளங்குகிறதல்லவா! மேலும், கள்ளிறக்குந் தொழிலும், கள் விற்பனை செய்யுந் தொழிலும் சான்றார் குலத்தினர்க்கே உரிய தொழிலாயின், பிற சாதியார் அத்தொழிலை மேற்கொள்ளுமாறு எங்ஙனம்? விரும்பிய எந்த சாதியாரும் அத்தொழிலை மேற்கொண்டமையால், அது குறிப்பிட்ட ஒரு சாதியார்க்கே உரியதல்ல என்று ஏற்படவில்லையா? எந்த காலத்திலும், எந்த தேசத்திலும் ஜன சமூகத்துக்கு இன்றி

யமையாததான கைத்தொழில்க ளொவ்வொன்றும் ஒவ்வொரு பிரிவார்க்கே உரியதன்று. விரும்பிய வர்கள் விரும்பிய தொழிலை மேற்கொண்டே செய்து வந்தார்கள். அதுதான் உலகியற்கையு மாகும். நம் தேசத்தில்தான்—அதிலும் சுயநல மிக்க ஆரியர் ஆதிக் கம் பெற்றிருந்த காலத்தில்தான்—அவர்கள் வகுத்த வருணுசிரம தருமம் வேரூன்றி யிருந்த காலத்தில்தான் இன்னின்ன தொழிலை இன்னின்ன சாதியார் செய்ய வேண்டுமென்று வரையறுக்கப் பட்டிருந்தது. அம் முறை கண்டிப்பாகவும் அநுஷ்டிக்கப்பட்டு வந்தது. ஒரு சாதியான் தன் சொந்த சாதிக்கு விதித்த தொழி லைச்செய்யாது வேறு தொழிலைச் செய்தானுயின், அதற் காக அவனுக்குத் தண்டனையும் விதிக்கப்பட்டதாகச் சரித்திரங் கூறுகிறது. அம்முறையில்தான் அரச வம்சத்தார்க்கு அரசாட்சி செய்தலும் போர்புரிதலும் உரிய தொழிலா யிருந்தது. எனவே, ஆரியர் ஆதிக்கம் பெற்றிருந்த அக்காலத்தில், படைக்கலம் பயிற்றலையும், போர்புரிதலையும் தங்களுக்குரிய தொழிலாய் மேற் கொண்டிருந்த ஏனுதிநாதரும், அதிசூரனும், அவர்க ளது உறவினர்களும் அரச குலத்தினரா யிருந்தனர் என்று நிச்சயித்ததில் என்ன தவறிருக்கிறது ?

'மங்கையர் கூந்தலில் வீசும் மணம் இயற்கை மணமா ? பல்வித நறுமலர்கள் சூடுவதால் உண்டாகும் செயற்கை மணமா ?' என்ற விஷயத்தில், இறைவனே நேரே வந்து உண்மை உரைத்த காலத்தும், 'நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றங் குற்றமே' என்று கல்விச் செருக்கால்—ஆணவத்தால்—அகம்பாவத்தால் தம் தவறுன கொள்கையைச் சாதித்த நக்கீரரைப் போல,

நான் தருக்க நியாய வாதத்துக்கும், ஆராய்ச்சி யறிவுக்கும் பொருத்தமான முறையில், சான்றூர் என்னும் பிரிவினர் ஆரியர் ஆதிக்கம் மிகுந்த காலத்தில் க்ஷத்திரியராய்—அரச வம்சத்தினராய்த் திகழ்ந்தனர் என்று நிறுவிய பின்னரும், சாதி வெறியர்கள்—பிற சாதியார் ஆக்கங்கண்டு பொறாமை கொண்டவர்கள்—துவேஷ புத்தியுடையவர்கள் சான்றூர்ப் பெருங்குடி மக்களை இழிவுபடுத்தவேண்டும் என்ற எண்ணத்துடனே, "சான்றூர் குலத்தினர் அரச வம்சத்தினராய் எக்காலத்திலும் இருந்ததில்லை; அவர்கள் கள்ளிறக்கும் அல்லது கள் விற்கும் இழி தொழிலை மேற்கொண்டவர்களே" என்பராயின், அத்தகையோர்க்கு என்ன கூறியும் பயனில்லை. அறியாமை யிருளில்—ஆணவ மலத்தில் கிடந்துழலும் அவர்களது பரிதாப நிலைக்கு மனமிரங்கிக் கடவுளை இறைஞ்சுவதன்றி, வேறொன்றுஞ் செய்தற்கில்லை.

ஆனல், சாதித் திமிரும், துவேஷ மனப்பான்மையும் கொண்ட குழுவினர்க்கு நான் கடைசியாக ஒன்று மட்டுங் கூற விரும்புகிறேன். சன்மார்க்கம், சமத்துவம், சகோதரத்துவம் முதலிய உயரிய கொள்கைகள் பரவிவரும் இக்காலத்திலும் குறுகிய புத்திகொண்டு பரிதபிக்கத்தக்க நிலையிலுள்ள சகோதரர்களே! சான்றூர் குலத்தினர் தங்களை அரசர் பரம்பரையினர் என்று உரிமை கொண்டாடிக் கொள்வதனல், உங்களுக்கு நேரும் இழுக் கென்ன? நஷ்ட மென்ன? நீங்கள் உங்களை உண்மை க்ஷத்திரியர்கள் என உரிமை கொண்டாடிக் கொள்ளும்போது, அவர்கள் மட்டும் ஏன் கொண்டாடிக் கொள்ளக் கூடாது. வழிப்

போக்கர்களை வழிமறித்து, அவர்கள் பொருளையும், சமயம் நேர்ந்தால் அவர்களது உயிரையுங்கூட, கொள்ளை கொள்வதையே தங்களுக்குரிய உயிர் வாழ்க்கையாக வுடையோரும், பயிர்த் தொழில் செய்வோர்க்கு மலக்கூடையைத் தலையில் தாங்கி உதவியாக நிலத்துக்கு எரு விடுவோரும், "ஆர்க்காட்டில் சண்டை யென்றால் அடுப்பங்கரையில் பதுங்கும்" கோழைகளான உழுதுண்போரும் எல்லாம் தங்களை அரச குலத்தினர் என்றும், சேர சோழ பாண்டியர்களது வம்சத்தினர் என்றும் உரிமை கொண்டாடி சாதி புராணம் பாடி வரும்போது, இயற்கையிலேயே வீரஞ் செறிந்தவர்களாய்—அஞ்சாமை யுடையோராய்—அறிஞர்களாய்—உள்ள சான்றோர் பெருங்குடியினர் தங்களை அரச குலத்தினர் என்று ஏன் உரிமை கொண்டாடிக் கொள்ளக் கூடாது? அதுவுந் தக்க ஆதாரங்க ளிருக்கும்போது ஏன் கூறிக் கொள்ளக் கூடாது?

நான் இச்சாதிப் பித்தர்களைப் போல் சாதி வெறி கொண்டு அலையவில்லை. நான் பிறந்த சாதிதான் உலகிலேயே மிக உயர்ந்தது என்று உரிமை கொண்டாடிக் கொள்ளவுமில்லை; அவ்வாறு போலி யுரிமை கொண்டாடவும் நான் விரும்பவில்லை. நாலு கோடி சாதியாக இந்து சமூகத்தில் தலை விரித்தாடும் இக்காலத்தில் மிகக் கேவலமாகக் கருதப்படும் சான்றோர் குலத்தினர், ஆரியர் ஆதிக்கம் பெற்று வருணாசிரம தருமம் வகுத்த அக்காலத்தில் என்ன தகுதியில்—நிலையில்—இருந்தார்க ளென்பதை விளக்கிக் காட்டுவதற்கு முற்பட்டேனே யொழிய வேறில்லை.

எங்கள் மூதாதையர் அரசர்களாயும், அம்மரபில் தோன்றியவர்களாயும் இருந்தார்க ளென்ற காரணத்தால், நானும், எனது சமூகத்தாரும் அரசர்களாக வேண்டு மென்ருே, அரச குடும்பத்தாராக வேண்டு மென்ருே விரும்பவில்லை ; செங்கோலும், சிம்மாசனமும், மணி முடியுங் கேட்கவில்லை. கேட்டாலும், யாரும் தாமாகக் கொண்டுவந்து கொடுத்து விடப் போவதில்லை. இக்காலத்தில் கல்வி யறிவும், தேகப் பலமும், பணமும் உடையவன் எவனே அவனே ஒரு கிராமத்துக்கு அதிகாரியாகவோ, ஒரு ஊர்க்குத் தலைவனுகவோ, ஒரு நாட்டுக்கு நாயகனுவோ, ஒரு நகரத்துக்கு அதிபதியாகவோ— இல்லை ; ஒரு தேசத்தையே கட்டியாளும் அரசனுகவோ வந்து விடலாம். இது இந்த இருபதாம் நூற்ருண்டில் ஜனநாயக ஆட்சி முறையில் அநுபவத்தில் காணும் உண்மையாகும்.

III

சைவசமயிக ளிடை ஏனுதிநாதர் நிலே

" ஜாதிபேதமும் மாதர்போகமும்
விட்டவன் சமாதி "

என்பது பெரியார் வாக்கு. புல் பூண்டு முதல் மனிதர் ஈருகவுள்ள எவ்வுயிரினும் இறைவன் நிறைந்திருப் பதைக் காண்பவர்களான பக்தர்களும், துறவிகளும் சாதிபேத—அதாவது வேற்றுமை கண்கொண்டு யாரையும் பார்க்கமாட்டார்கள். அதுபோலவே, அப் பக்தர்களேயும், துறவிகளேயும் லௌகிக வாழ்க்கையை மேற்கொண்டுள்ள மற்ற மக்கள், இவர் இன்ன சாதி

யார்; அவர் இன்ன வகுப்பார் எனக் கூறி வேற்றுமை பாராட்டக் கூடாதென்பது வேதாகம விதி.

அப்படி யிருந்தும், சாதி வெறிகொண்டலேயும் ஒரு சில மக்கள், சிவனடியார்களிடத்தும், பகவத் பக்தர்களிடத்தும் கூட சாதி வேற்றுமை பாராட்டி இழிவு படுத்த முயல்கிறார்கள்; அவர்களை வணங்கி வழிபடாது புறக்கணிக்கிறார்கள். இவ் வேற்றுமை யுணர்ச்சியை அச் சாதி வெறியர்கள், விஷய மின்னதென அறியா பாமர மக்களிடை பரவச்செய்து அவர்களையும் இப் பெரியார்களிடை பேதங் காணச் செய்விக்கிறார்கள்.

இதற்கு உதாரணம் வேண்டுமானால், நமது ஏனாதிநாத நாயனர் சரித்திர மொன்றே அமையும். ஏனாதி நாதர் அரச குலத்தில் பிறந்த சுத்த வீரராயும், சிவனடியாராயும், தியாகியாயு மிருந்தும், சைவசமயாசாரியார் சுந்தரமூர்த்தி சுவாமிகள், நம்பியாண்டார் நம்பி, சேக்கிழார், சந்தான குரவர் உமாபதி சிவாசாரியார் முதலிய பழுத்த ஞானிகளால் போற்றிப் புகழ்ந்து வணங்கப்பட்டவரா யிருந்தும், பிற்காலத்தில் மக்கள், செயற்கரிய அரும் பெருஞ் செயல் புரிந்து நிலைத்த புகழைப் பெற்ற அப் பெருமானை அவ்வளவாகப் பாராட்டியதாகத் தெரியவில்லை. ஏன்? அறிவும் நாகரிகமும் மேம்பாடடைந்து பரந்த நோக்கமும், விரிந்த வுள்ளமும் கொள்வதற்கு ஏதுவாயுள்ள இக் காலத்திலும், சாதாரண தமிழ்மக்களிடத்து மட்டுமல்ல; சைவ மக்களிடையேகூட ஏனுதிநாதரை வந்திப்பார் மட்டுமல்ல—சிந்திப்பார் கூட இல்லை என்றால் வியப்புகொள்ளா திருத்தற்கில்லை.

ஏனுதிநாத நாயனர் கவனிப்பாரற்று கிடப்பதற்குக் காரண மென்ன ? பொதுவாக, நம் மக்களே நமது முன்னோர்களான சமயப் பெரியார்களேயும், பெரும் புலவர்களேயும் போற்றுவது கிடையாது என்று சாதாரணமாக நம் தமிழ் மக்கள்மீது கூறப்பட்டுவரும் ஊக்க மின்மை—உணர்ச்சி யின்மை—அலட்சிய மனோபாவம்—அசிரத்தை என்ற குற்றங்கள் மட்டுமன்று ; அது ஒருபுற மிருந்தாலும், மக்களிடையே உயர்வு தாழ்வு என்ற சாதி வேற்றுமை யுணர்ச்சி தடித்திருப்பதுதான் முக்கிய காரணமாகும். அதற்கடுத்தபடியாக வேண்டுமானல், அசிரத்தைக் குற்றத்தைக் கூறிக் கொண்டு நமக்குள் சமாதான மடையலாம். ஆனல் உண்மையில் மற்ற நாயன்மார் போற்றப்படு மளவுக்கும், ஏனுதிநாத நாயனர் போற்றப்படு மளவுக்கும் உள்ள தாரதம்மியத்தைக் கவனித்தால், அதாவது மற்ற நாயன்மார் போற்றப்படு மளவு கூட ஏனுதிநாதர் போற்றப்படவில்லை யென்றல், அதற்கு அசிரத்தைதான் காரணமென்று எவ்வாறுகூற முடியும் ? அவ்வாறு கூறினல்தான் நாம் எங்ஙனம் ஒப்புக்கொள்ள முடியும் ?

ஏனுதிநாதர் அரச குலத்தவரா யிருந்தும், அக்குலத்திற்கேயுரிய தொழிலாகிய படைக்கலம் பயிற்றும் ஆசிரியத் தொழிலே மேற்கொண்டிருந்தும், அவரது குலத்தின் வழி வந்த நம்மில் பலர் கள்ளிறக்குந் தொழிலேயும், கள் விற்குந் தொழிலேயும் மேற்கொண்டு சமூக நிலேயில் தாழ்த்தப்பட்டிருப்பதால், அக் கேவல நிலேமையை அவருக்கும் உரிமைப்படுத்தி, செம்படவர், வண்ணர் போன்ற தாழ்த்தப்பட்ட சாதிகளோடு

சேர்த்தெண்ணி, தங்களை உயர் சாதியினரெனக் கருதித் தருக்கி நிற்கும் ஒரு சில வகுப்பார் போற்று தொழிந்தனர்; இன்றும் அப் பெரியாரைப் போற்றி வணங்காதிருந்து வருகின்றனர்.

"எவரேனுந் தாமாக விலாடத்திட்ட திருநீறும் சாதனமுங் கண்டால் உள்கி, உவராதே யவரவரைக் கண்ட போது உகந்து அடிமைத்திறம் நினைந்து அங்கு உவந்து நோக்கி......கவராதே தொழும் அடியார்" என்றும்,

"அங்கமெல்லாங் குறைந்து அழுகு தொழு நோயராய் ஆவுரித்துத் தின்று உழலும் புலையரேனும், கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்பராகில் அவர் கண்டீர் நாம் வணங்குங் கடவுளாரே" என்றும் கூறுந் திருநாவுக்கரசு சுவாமிகளின் திருத்தாண்டகப் பாசுரங்களை மனமுருகப் பாடி ஆடி மெய் மறப்பர் சிவபக்தர் பலர். ஆனால், செயலிலோ அவ்வாறு கருதி நடப்பவர் மிக மிக அரியர். சைவ சமயாசாரியர் அருளிப் போந்த சமரச சன்மார்க்க ஞான உபதேசங்களைக் காற்றில் பறக்கவிட்டு, சாதி சமய வெறிகொண்டு திரிபவர்களே பெரும் பாலாராய் இருக்கின்றனர். ஆகவே, சாதி பேதத்தை மனதில் கொண்டே ஏனாதிநாத நாயனார் என ஒரு சிவனடியார் இருந்தார் என்று வாயாலுங் கூறாது அவரை அலட்சியப்படுத்தி வருகின்றனர் என்று நான் துணிந்து கூறுவேன். இது நான் கண்ட அநுபவ உண்மையாகும். இதை யாரும் அவ்வளவு எளிதில் மறுத்துவிட முடியாது. அவ்வாறு மறுக்க முன்வருபவர்கள், நான் கேட்கும் கீழ்வரும் கேள்விகளுக்குச் சரியான விடை யளிப்பார்களா? என்று கேட்கிறேன்:—

(1) ஏனாதிநாத நாயனாரை மற்ற நாயன்மாரைப் போலவே போற்றி வருகிறோ மென்பது உண்மை யானால், அவரது திரு நக்ஷத்திரத்தை அறுபத்து மூன்று நாயன்மாருள் ஒருவராகிய அவரது உருவச் சிலை வைக்கப்பட்டிருக்கும்—சிவாலயங்களில் கூட ஏன் கொண்டாடுவதில்லை ?

(2) மற்ற நாயன்மார் புராணங்களைத் தனித்தனி யாக வைத்து புராண படனம் அதாவது பிரசங்கஞ் செய்வதுபோல், ஏனாதிநாத நாயனார் புராணத்தை இதுவரையில் எங்கேனும் எவரேனும் வைத்து பிரசங் சஞ் செய்திருக்கின்றனரா ?

(3) சேக்கிழார் பெருமான் பாடியருளிய பெரிய புராணத்தை முறையாகப் பிரசங்கஞ் செய்ய வைத்தா லும், புராணிகர்கள் ஏனாதிநாத நாயனார் சரித்திரத்தை ஏன் சரியாகச் சொல்வதில்லை ?

(4) வெண்ணீறும், வேடமும், பூசையும் மெய்யென் றெண்ணி வழிபட்டு உய்ந்த சேதிநாடர், ஏனாதிநாதர் ஆகியவர்களுள், சேதிநாட்டுக் குறுநில மன்னரான மெய்ப்பொருள் நாயனாரை மட்டும் சிறப்பித்துக் கூறி, அவரினும் தியாகத்தில் ஒரு படி உயர்ந்த ஏனாதிநாத நாயனாரைச் செவ்விய மொழிகளால் சிறப்பித்துக் கூறாததற்குக் காரண மென்ன ?

(5) ஏனாதிநாதரை எவரேனும் குறிப்பிட நேர்ந் தால், அல்லது அவரைப்பற்றி எழுத நேர்ந்தால், சந்தான குரவரி லொருவராகிய கொற்றவன் குடி உமாபதி சிவாசாரியார் இயற்றியுள்ள சேக்கிழார் புராணத்தில் எவனோ ஒரு சாதி வெறியன் உண் மைக்கு மாறாகப் பாடி இடையே சேர்த்துள்ள சாதிப்

பட்டோலை விருத்தத்தை யொட்டி, செம்படவர், வண்ணர், பாணர் முதலிய தாழ்த்தப்பட்ட வகுப்பாரோடு ஒப்பிட்டுக் கூறுவதன் நோக்க மென்ன ?

(6) எவருக்கேனும் ஏனதிநாத நாயனருடைய திருப்பெயர் வைக்கப்பட்டிருக்கிறதா ? அவர் பெயரால் சங்கமோ, அல்லது தர்மசாலையோ ஏற்படுத்தப்பட்டிருக்கிறதா ?

நான் என் அனுபவத்தில் இதுவரை அறிந்த வளவிலும், அறிவாலும், சிலத்தாலும், வயதாலும் மூத்த பெரியோர்களைக் கேட்டு அறிந்த வளவிலும் இவ்வாறு அவர் சம்பந்தமாக ஒன்றுஞ் செய்வதில்லை யென்ற முடிவுக்கே வந்திருக்கிறேன். அவ்வாறில்லை என்று எப் பெரியாரேனும், அறிஞரேனும் தக்க சான்றுகளோடு நிலைநாட்டி மெய்ப்பிப்பார்களானல், நான் கூறியவைகள் அனைத்தும் தவறென்பதைத் தடையில்லாது ஒப்புக்கொள்ளுவேன்.

பெரிய புராணத்தை யாரம்பித்து முறையாகப் பிரசங்கஞ் செய்யும் புராணிகர்கள்கூட ஏனதிநாத நாயனர் சரித்திரத்தைச் சரியாகச் சொல்வதில்லை யென்பதற்கு எனது சொந்த அநுபவத்தில் நிகழ்ந்த ஒரு சிறு சம்பவத்தை இங்கு எடுத்துக் கூறுவது பொருத்தமாகும் எனக் கருதுகிறேன்.

சென்னைமா நகரில் ஓரிடத்தில் பெரிய புராணத்தைப் பிரசங்கிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. இவ்விதம் சிவனடியார் சரிதங்களைக் கேட்டு மகிழ ஏற்பாடு செய்தவர்கள் நமது குலத்தவர்களில் நாடார் என்று சாதிப் பட்டத்தை வைத்திருக்கும் செல்வந்தர்களாவர். பெரிய புராணத்தைப் பிரசங்கிக்க நியமிக்

கப்பட்ட அறிஞரோ, புராணஞ் சொல்வதையே தொழிலாகக்கொண்ட புராணிக ரல்லர். அவர் ஆங்கிலேயர் காரியாலய மொன்றில் உத்தியோகம் பார்த்தவர். தமிழறிஞர். அவர் அச்சமயம் உபகார சம்பளம் வாங்கி ஓய்வு பெற்றிருந்ததால், அவரை ஆதரிக்கும்பொருட்டு பெரிய வர்த்தகர்களான நாடார் நண்பர்கள் பெரிய புராணஞ் சொல்லும்படி கேட்டிருந்தனர். அப் புலவர் ஒரு குலத்துக்கு ஒரு நீதி கூறிய மநு தரும சாஸ்திரத்தைப்போ லல்லாது, யாவர்க்கும் பொதுவாக நீதி போதித்துச் சென்ற வள்ளுவர் திருக்குறளை மறுவற நன்குணர்ந்தவர்; பிறர்க்கும் எடுத்துரைப்பவர். அவர் எனக்கு இயற்றமிழ் ஆசிரியருமாவர். அப்பேர்ப்பட்ட பெரியார் பெரிய புராணத்தில் கூறியுள்ள நாயன்மார் சரித்திரங்களை அழகாகவும், நயம்படவும் கூறி வந்தவர், ஒவ்வொரு நாயனருஞ் செய்த அரிய பெரிய செயல்களை விரிவாக எடுத்துரைத்துப் பலபடப் பாராட்டியவர், நமது ஏனுதி நாத நாயனர் சரித்திரத்தைக் கூறும்போது, சேக்கிழார் பாட்டுக்குப் பதார்த்தங் கூறி வெகு சாதாரண முறையில் பிரசங்கஞ் செய்தார். அப் பிரசங்கம், கடனுக்குக் கட்டி யழுபவன் நிலையையும் கூலிக்கு மாரடிப்பவன் நிலையையும் ஒத்திருந்ததே யொழிய, வேறு அதிகமாகக் கூறுவதில்லை.

இம் மாறுதலைக் கண்டதும் நாங்கள் திகைத்துப் போய்விட்டோம். 'என்னே! சாதி வெறி செய்யுங் கோலம்!' என்று நான் மனம் வருந்தினேன். இப் பிரசங்கத்தை முன்னின்று நடத்திய நாடார் நண்பர்கள் மனங் கொதித்தனர். உடனே அவர்கள் பிரசங்

கத்தையே நிறுத்திவிட்டனர். இதனால் பெரிய புராணம் முடிவடையாமலே அரை குறையாக நின்று போயிற்று. அப் பிரசங்கியின் விபரீத மனப் போக்கின் பயனாக, நாடார் இளைஞர்களில் பலர் பக்கா நாஸ்திகர்களாயினர்; சுயமரியாதை இயக்கத்தில் சேர்ந்தனர் என்றால் நீங்கள் ஆச்சரியப்படக்கூடாது.

உலகப் போக்கை ஒருவாறு உணர்ந்தவர்; பொது மறையான திருக்குறளை இடைவிடாது ஓதுபவர்; அதுமட்டுமல்ல; பலர்க்கும் எடுத்து உரைப்பவர்; அத்துடன், ஏனாதிநாத நாயனார் வமிசத்தைச் சேர்ந்தவர்களாகிய நாடார்களின் பொருளுதவி கொண்டு அவர்களிடையே பிரசங்கஞ் செய்துவந்தவர்; அத்தகைய ஒரு அறிஞரே இவ்விதம் குறுகிய மனப்பான்மை கொண்டு, ஏனாதிநாத நாயனார் செய்த செயற்கரிய செயலை—தியாகத்தை—மனம் விட்டுப் பாராட்ட முன் வரவில்லையென்றால், மற்ற சாதாரண புராணிகர்கள், குருட்டுச் சைவர்கள் மனநிலை எவ்வாறிருக்கும் என்பதைக் கூறவும் வேண்டுமோ! இதிலிருந்து சாதிப் பித்து மக்கள் மனதில் எவ்வளவு தூரம் வேரூன்றியிருக்கிறது என்று தெரிந்து கொள்ளலாம்.

IV

ஏனாதிநாதரும் சேதிநாடரும்

பெரிய புராணத்தில் வெண்ணீற்றையும், வேடத்தையுமே மெய்ப்பொருளென்று கருதிச் சிவபெருமான் திருவடிப் பேற்றையடைந்தவர்கள் நமது ஏனாதி நாதரும், சேதிநாட்டுத் தலைவரான மெய்ப்பொருள்

நாயனாரு மாவர். இருவரது சரித்திரப் போக்கும் ஏறக் குறைய ஓரே விதமாகவே இருக்கும். இருவரும் அவர் களது பகைவர்களால் வஞ்சகமாகக் கொலை செய்யப் பட்டவர்கள். விரோதிகள் அவர்களுக்குத் தீங்கு செய்ய முற்பட்டபோது, அவர்கள் காட்டிய தியாக வுணர்ச்சி யாவராலும் பாராட்டப்படத் தக்கதாகும்.

அவ்வித மிருக்க, அப்பெரியார்களைப் போற்றிப் புக ழும் வகையில் பேதங் காட்டுவது ஞான சூன்யமும், சாதி வெறியும் கொண்டவர்கள் செயலன்றோ!

மெய்ப்பொருள் நாயனார் சேதிநாட்டுக் குறு நில மன்னர். அவர் விபூதியும் ருத்திராக்கமும் தரித்த சிவ னடியார்களைக் கடவுளாகவே பாவிப்பவர். இவருடன் வேற்றரச னொருவன் போர்புரிந்து பலமுறை தோல்வி யடைந்தான். எனவே, கடைசியாக அவன், இவரை வஞ்சனையால் வெல்லக் கருதிச் சிவனடியார் வேடம் பூண்டு குற்றுடை வாளை (சுரிகையை) மேல் வஸ்திரத் தால் மூடிப் புத்தகம்போ லெடுத்துக்கொண்டு போனான். அவன் மெய்ப்பொருள் நாயனாரை யணுகி, 'உனக்கு ஞானோபதேசஞ் செய்ய வந்தேன்' என்றான். சிவ வேடத்தைக் கண்டவுடனேயே இவர் மெய்யடியார் எனக் கருதிய நாயனார் அக்கொடியவனை வணங்கினார். உடனே அவன் அவரை வெட்டினான். இதே சமயத் தில் அரண்மனை வெளியே காவல் காத்து நின்ற தத் தன் சந்தேகத்தோடு உள்ளே வந்து பார்த்து நடந்த விஷய மனைத்தும் உணர்ந்து கோபங்கொண்டு முத்தி நாதனை வெட்டப் போனான். உயிர் நீங்குந் தருவாயி லிருந்த நாயனார், 'தத்தா! அவர் நம் தமர் (உறவினர்)' என்று கூறித் தடுத்து, அவனுக்குத் தமது குடிமக்க ளால் யாதொரு தீங்கும் நேராதவாறு காத்து நகருக்கு வெளியே கொண்டுபோய் விட்டு வரும்படி உத்தரவிட் டார். அவ்வாறே தத்தன் செய்து, திரும்பி வந்து செய்தி யறிவிக்கும்வரை காத்திருந்த பின்னர், அவர் சிவபெருமானைத் தியானித்து முத்தியடைந்தார்.

இவ்விதம் இரு நாயன்மாரது சரித்திரங்களும் கதைப்போக்கில் ஒருவாறு ஒத்திருந்தாலும், அவர்கள் செய்த செயற்கரிய செயலிலும், காட்டிய மனோபாவத்திலும் பெரிதும் வேறுபாடு இருப்பதை ஊன்றிப் படிப்பவர்கள் உணர்வார்கள்.

மெய்ப்பொருள் நாயனருக்குத் தம்மை முத்திநாதன் கொலை செய்யும் வரை அவன் எதிரி எனத் தெரியாது. உண்மையில் சிவனடியாரென்றே எண்ணி வணங்கினர். வெட்டுண்ட பிறகு சிவனடியாராக வந்தவன் பகைவனென அறிந்து என் செய்வது? பழிக்குப் பழி வேண்டுமானல், அவனைக் கொலை செய்திருக்கலாம். ஆனல், அதில் என்ன பயன்? இதனல் இவரது வெட்டுண்ட உடல் பொருந்தப் பெற்று உயிர் பிழைக்க முடியுமா? ஒருக்காலும் முடியாது. ஆகவே பூத உடல் மறைந்தாலும் புகழுடம்பு நிலைத்து நிற்க வேண்டுமென்று சேதிநாட்டரசர் விரும்புவது இயற்கை தானே! தம்மைக் கொலை செய்தவனைத் தாம் கொலை செய்ய எண்ணாது — தம்மைச் சேர்ந்தவர்களைக் கொண்டு அவனைக் கொல்விக்காது விடுவித்தால்,—அது யாவராலும் பாராட்டப்படும் காரியமன்றோ! எனவே, இப்புகழ் விருப்பத்தோடு சிவநேயமுஞ் சோ சேதி நாட்டு மன்னர், பகைவனை முத்திநாதனிடம் தாராள மனப்போக்கோடு நடந்துகொண்டு அழிய புகழ் பெற்றார்.

நம் ஏனுதிநாதருக்கோ தம்மோடு தனியாகப் போர் புரியவந்த அதிசூரன் ஜென்ம விரோதி என்பதும், சிவனடியார்க்கு உதவுவதற்கு ஏதுவாக இருக்கும் படைக்கலம் பயிற்றுந் தொழிலில் வரும் ஊதியத்தைத் தடுக்க முயல்பவன் என்பதும் நன்கு தெரியும். அதிசூரன் நெற்றியை மறைத்திருந்த கேடயத்தை அப்புறப்படுத்தும் வரை, அவனோடு வாட்போர் புரிய தயாராயிருந்த ஏனுதிநாதர், "ஆ! கெட்டேன்! இவர் சிவபெருமானுக்கு அன்பர் என்பதை இதுவரை யறி

யாது தவறிழைத்தேனே!" என மனம் பதறி கையிலிருந்த வாளை நழுவவிட்டார். அவ்வாறு தயங்கியவர், அத்துடனாவது அதிசூரனுடன் சமாதானஞ் செய்து கொண்டு சென்றிருக்கலாம். "இனி நீயே படைக்கலம் பயிற்றும் ஆசிரியத் தொழில் உரிமையை ஏகபோகமாக அனுபவித்துக் கொண்டிரு. நான் இனி உன் விஷயத்தில் தலையிடுவதில்லை" எனக்கூறி யிருக்கலாம். ஏனாதிநாதர் அவ்விதஞ் செய்ய எண்ணவேயில்லை. 'வெண்ணீற்றை நெற்றியில் விரவப் பூசியிருக்கும் அதிசூரனது மனக் குறிப்பின்படியே நடந்து கொள்வதே நமது கடமை' எனத் தீர்மானித்து அவனது வாளுக்கு இலக்காகத் தம் தலையைக் குனிந்து கொடுத்தார். வெண்ணீறும் வேடமுமே மெய்யெனக் கருதித் தியாக உணர்வு மேலிட்ட அவருக்குத் தம் உயிர் கருப்புக்கட்டியாக—அதாவது அருமையாகத்—தோன்றவில்லை. அவ்வாறு தம் ஆருயிரை எதிரியின் வாளுக்கு மனமுவந்து பலியிட எண்ணுகையிலும், நிராயுதபாணியைக் கொன்றான் என்ற பழி திருநீறு பூசிய அதிசூரனுக்கு ஏற்படக் கூடாதென்று எண்ணி, தம் கையிலிருந்து நழுவி விழுந்த வாளை மீண்டும் எடுத்து அவனோடு போர் செய்ய முயல்வது போல் பிடித்து நின்றார் என்றால், அவரது தியாக வுணர்ச்சியின் உயர்வை என்னென்பது! இதுவன்றோ வீரம்! இதுவன்றோ உண்மையான தியாகம்! இதுவன்றோ கருணைக் கடலான இறைவன் உவந்தேற்கும் செயற்கரிய செயல்!!!—இவரன்றோ சுத்தவீரர்! தீரர்! சூரர்! இவரன்றோ பெரிய தியாகி!! இவரன்றோ சிவபெருமானுக்குச் சிறந்த அடியார்!!! அத்தகைய பெருமானை—பெரியாரை—உத்தமரை—ப் போற்றிப் புகழாது—வாழ்த்தி வணங்காது—ஏத்தி இறைஞ்சாது—புறக்கணித்து வைத்திருக்கும் தமிழ் மக்களின்—முக்கியமாக, சைவ நன்மக்களின்—குறுகிய மனப்பான்மையை என் போன்றார் குறை கூறாதிருக்க முடியுமா? சாதி

வெறியால் ஒரு சமயப் பெரியாரை—தியாக புருஷரை—இகழ்ந்தொதுக்கும் பெரும் பாவத்துக்கு எங்கு போய் கழுவாய் தேட முடியும்? எத் தெய்வம் அவர்களை ஆட்கொண்டருளும்? என்று நான் கேட்கிறேன். இது நமது முதியோரை அவமதித்ததாகு மல்லவா! இது நன்றி கொன்ற செயலல்லவா! இவ்வாறிருப்பது முறையா! தகுமா! தருமந்தானு? சிந்தித்துப் பாருங்கள் சகோதரர்களே!

எனவே, இனியேனும் நமது ஏனுதிநாத நாயனுர் போன்ற சமயப் பெரியார் விஷயத்தில் சாதிபேதம் பாராட்டாது—அலட்சிய மனேபாவங் காட்டாது—அவர்களைப் போற்றிப் புகழ்ந்து வாழ்த்தி வணங்க ஒவ்வொருவரும் முற்படவேண்டும். அப்பெரியார்கள் காட்டிச் சென்ற வழியைப் பின்பற்றி நடக்க முயல வேண்டும். அவர்கள் அருளிய உபதேச மொழிகளை மனதிற் கொண்டு சீரிய நெறியில் வாழ்க்கையை நடத்த வேண்டும். அவர்கள் பிறந்த திருநட்சத்திரங்களைக் கொண்டாடு முகத்தான் அவர்களை என்றும் மறவாதிருத்தல் வேண்டும். அவர்கள் பெயரால் சங்கங்கள்—கழகங்கள் ஏற்படுத்தி சன்மார்க்க ஒழுக்கங்கள் பயில வேண்டும். இவ்விதமெல்லாம் செய்து நாம் நமது பெரியோர்களை—மூதாதையர்களை மதித்தால் தான், நாமும் பிற நாட்டாரால் மதிக்கப்படுவோம். நமது தாய்நாடும் கௌரவிக்கப்படும். ஏனுதிநாதர் வம்சத்தவரான நாம் அவரது வாழ்க்கையை—உயரிய ஒழுக்கத்தை—ஆதர்சமாகக் கொண்டு நடந்து உலகில் உன்னத நிலையை யடைய முயல்வோமாக!

ஏனுதிநாதர் திருவடி வாழ்க!

Printed at the 'Satya Nesan' Press, 3-27, Broadway, Madras

இந் நூலாசிரியர் இயற்றிய வேறு சில நூல்கள்

நீண்டாதார் யார்? அல்லது வசீகர மனோகரி ...	0	8	0
புருடோத்தமன் அல்லது கோன் ஆட்சியின் விழ்ச்சி ...	0	12	0
யான் ஏன் பெண்ணாய்ப் பிறந்தேன்?	0	4	0
காதலனா? காதகனா? ...	0	10	0
இவ்வுலகைத் திரும்பிப் பாரேன்!	0	12	0
சீமாட்டி கார்த்தியாயினி ...	0	8	0

அச்சிலிருக்கும் நூல்கள்

சைவ சித்தாந்த தத்துவம் ...	1	0	0
எதியோபிய தேச சரித்திரம் ...	0	8	0
'ஜீவா' சிறுகதைத் தொகுதி 1...	0	4	0
'ஜீவா' சிறுகதைத் தொகுதி 2...	0	4	0
'ஜீவா' சிறுகதைத் தொகுதி 3...	0	4	0

கிடைக்குமிடம்:—

287, திருவொற்றியூர் ஹை ரோட்,

தண்டையார்பேட்டை,

சென்[illegible]dras

Printed at the "Satya Nesan" Press, 3/27, Br[illegible]